இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-04 | 20-09-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-215


S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (பி-12761)

## பிரான்சில் "விடுதலைப் பேரொளி" வெளியீடு

பிரான்ஸ் தலைநகர் பரிசில் 'ஈழமுரசு' பத்திரிகை நிறுவனத்தினரால் 'விடுதலைப் பேரொளி நூல்' நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

மாணிநாகேசின் தலைமையில் மாலை 4.00 மணிக்கு நிகழ்வுகள் தொடங்கின. தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரான்ஸ் கிளை துணைப் பொறுப்பாளர் நேரியன் ஏற்றி வைத்தார்.

மங்கல விளக்கினை தாயகத்தில் இருந்து சிறப்பு விருந்தினராகசென்றிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கமும் அவரது துணைவியாரும் ஏற்றி வைத்தனர்.

பா ளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். நூலின் முதற் பிரதியை மாவீரர் லெப்.நாதனின் பெற்றோர் திருமதி. முத்துக்குமாரசாமி சற்குணம் பெற்றுக் கொண்டார்.ஊடக வியலாளர்கள் சிவகுரு பிறேம் மற்றும் பற்றிமாகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் அரிதான ஒளிப்படங்கள், களநிலைப்படங்கள் தாங்கி 296 பக்கங்களுடன் முழுமையான வண்ண வடிவமைப்பில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழீழத் தேசியத் தலைவரின் வாழ்வியல் குறிப்புக்கள், சாதனைகள் எதிர்கொண்ட சோதனைகள் ஆகியவையையும் வெளிப்படுத்தி நிற்கும் இந்த நூல் ஒரு வரலாற்று ஆவணக் குறிப்பு நூலாக வெளியாகியுள்ளது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் பீட்டர் சால்க், கலாநிதி, அல்பேட் கூலன், ராவய ஆசிரியர் விக்டர் ஐவன், கேணல் விதுசா,வைகோ. பேராசிரியர் பிறையன்

(12ஆம் பக்கம் பார்க்க)




# யுத்த நிறுத்தத்தை அரசு இல்லாதொழித்துள்ளதை

# சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்தவேண்டும்

## கண்காணிப்புக்குழுவிடம் திருமலை த.ம.பேரவை வேண்டுகோள்

*திருகோணமலையில் யுத்த நிறுத்தத்தை சிறிலங்கா இராணுவமும் அரசும் ஒழித்து விட்டது என்பதை சர்வதேச சமூகத்தினருக்குத்தெரியப்படுத்துமாறு போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினருக்கு திருகோணமலை தமிழ்மக்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.*

கண்காணிப்புக்குழுவுக்கு தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்கினேஸ்வரன் அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

புத்தர் சிலையை சட்டவிரோதமாக அமைத்ததன் பின்னர் திருகோணமலை நகரில் ஏற்பட்டுள்ள தாரண அச்ச சூழ்நிலை பற்றி கண்காணிப்புக்குழுவுடன் எத்தனையோமுறை பேசப்பட்டுள்ளது. அரசும் அரச படைகளும் திருகோணமலை நகரில் மிகச்சொற்ப அளவில் வசிக்கும் பெரும்பான்மையின சிங்கள மக்களை சமாதானப்படுத்தும் வகையில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

சிறிலங்கா அரசும் அரச படைகளும் திட்டமிட்டுச் செய்யும் உளவியல்யுத்தத்தின் காரணமாக பெரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் கடமைக்குச் சென்ற இரு பொலிசாரைக் காணவில்லை

### -ப ழ.பொலிஸ் நிலையம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிசார் காணாமல் போயுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் பிரஸ்தாப இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் யாழ். நகரப்பகுதியிக்கு கடமைக்காக சென்றிருந்த சமயமே காணாமல் போயிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காணாமல் போன இரு பொலிசாரில் ஒருவரிடம் துப்பாக்கி இருந்ததாகவும் பொலிசார் கூறுகின்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் நடவடிக்கைகளைக்கண்டித்து நாளை திருமலையில் பூரண கதவடைப்பு

### -திருமலை மாவட்ட பொங்குதமிழ் சமூகம் கோரிக்கை

(திருகோணமலை)

சிறிலங்கா இராணுவம் ஆயுதக்குழுக்களுடன் இணைந்து விடுதலைப்புலிகளுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்டுள்ள நிழல் யுத்தத்தைக்கண்டித்து திருகோணமலையில் நாளை பூரண கதவடைப்பை மேற்கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட பொங்குதமிழ் சமூகம் கேட்டுள்ளது.

சிறிலங்கா அரசும் இராணுவமும் கிழக்கில் ஆயுதக்குழுக்களுடன் இணைந்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்டுள்ள அராஜகத்தை

(12ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் பாலியல்வல்லுறவுக்கு உள்ளான பெண்ணைக்காணவில்லை

2001ஆம் ஆண்டின் பங்குனி மாதப்பகுதியில் மன்னாரில் வைத்து கடற்படையினராலும் பொலிசாராலும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண்களில் ஒருவர் தற்போது காணாமல் போயிருப்பதாக மனித உரிமைகளிற்கான சட்டத்தரணி எம்.றெமீடியஸ் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி பாலியல் வல்லுறவுச்சம்பவம் தொடர்பாக அநுராதபுரம் மேல் நீதிமன்றில் இடம்பெறுவுள்ள வழக்கு விசாரணையின் முக்கிய சாட்சியான பெண்ணொருவர் தொடர்ச்சியான கொலைப்பயமுறுத்தலிற்கு உள்ளாக்கப்பட்டு வரு

(12ஆம் பக்கம் பார்க்க)

## சு.க.வின் முதலாவது பிரச்சாரக்கூட்டத்தில் சந்திரிகா, அநுரா இல்லை

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதித்தேர்தல் பிரச்சாரக்கூட்டம் இன்று ஆரம்பமாகின்ற போதிலும் இக்கூட்டத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துகொள்ளமாட்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டம் இன்று மாலை கொழும்பு மாநகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ள போதும் இக்கூட்டத்தில் அவரும், அநுராபண்டாரநாயக்கவும் கலந்துகொள்ளமாட்டார்கள் என அறிவிக்கப்படுகிறது. (32)

## நவம்பர் 17 இல் சனாதிபதித் தேர்தல்; ஒக்.ஏழுமுதல் வேட்புமனு ஏற்பு!

(கொழும்பு)

சிறிலங்காவின் அடுத்த சனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் அடுத்தமாதம் ஏழாம் திகதி முற்பகல் 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை சிறி ஜயவர்த்தனபுர ராஜகிரிய சரண மாவத்தையில் அமைந்திருக்கும் தேர்தல்கள் செயலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும் தினத்தில் நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் வைப்புப் பணம் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் ஒரு கோடி 33இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க இருப்பதாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சனாதிபதித் தேர்தல்தொடர்பான தபால் மூலவாக்காளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

**எமது எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப்போல் தான் நாளைய எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும், வருத்தப் படும்.**

— தியாகி லெப்.கேணல் திலீபன்



## துயர் பகிர்கிறோம்

### அமரர் மாணிக்கம்-நற்குணம்

17.09.2005 அன்று இறைபதம் எய்திய முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சபையின் பயிற்சிக் கல்லூரி அதிபர் ந. அருள்குமார் அவர்களின் தந்தையார் காலமாகிவிட்ட துயரச் செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைகிறோம். அவர்களது குடும்பத்தின் துயரில் கலந்து கொண்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:-
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
விரிவுரையாளர்கள், மாணவர்கள்,
மாவட்ட கூட்டுறவுச் சபை.

(6614)

## ஓராண்டு நீங்காத நினைவுகள்

பிறப்பு 01 09 1947



இறப்பு 20 09 2004

### டாக்டர் நாகமுத்து- சண்முகநாதன்

வசாவிளான் -யாழ்ப்பாணம்

*திதி 09.10.2005*

அன்போடு அரவணைத்து அறிவுதனை ஊட்டி
ஆற்றல் மிகு மனிதராய் எம்மை
வளர்த்து விட்ட எம் அன்புத் தந்தையே
பிஞ்சுவயதில் உங்கள் பிரிவு பேரிடியாய்
போனதுவோ எத்தனை உயிர்காத்த
உங்கள் உயிரை யாராலும் காப்பாற்ற
முடியாது போனதுவோ ஏழேழு
ஜென்மம் எடுத்தாலும் உங்கள் நினைவுகள்
எமைவிட்டு நீங்காது

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி!!!

144, பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளை.

(6721)

## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

*பணிநிலை:-* ஊர்தி ஓட்டுநர் தரம் -03

*தகைமைகள்:-* 01. க.பொ.த (சா/த) தேர்வில் ஆகக்குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

02. ஊர்தி ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.

03. ஆண்பாலார் மட்டும்.

*அகவை எல்லை:-* 25-35 வருடங்கள்.

*மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:-* 3,310 - 4,510 + 6,000
60 ❖ 20

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்கு தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும் கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் இரத்தினம் மேல்மாடி, யாழ்சாலை, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியக மனிதவளப்பகுதிக்கு 27.09.2005 ஆம்நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

02. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.

04. நற்சாட்சிப் பத்திரங்கள்.

05. ஊர்தி ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் (Vehicle Driving Licence)

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.12836)



# சகலவித அணுத்திட்ட நடவடிக்கைகளையும் வடகொரியா கைவிடுவதாக இணக்கம்

(பீஜிங்)

**தமது நாட்டின் சகலவிதமான அணுத்திட்ட நடவடிக்கைகளையும் கைவிடுவதற்கு வடகொரியா இணங்கியுள்ளதாக பீஜிங் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.**

இதன்போது ஆயுதப்பரம்பல் திட்டத்தை தடுப்பதற்கான உடன்படிக்கையிலும் இணைந்து கொள்வதாகவும் வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் அணுத்திட்ட சர்ச்சையை முடிவிற்கு கொண்டு வரும் பொருட்டு இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட ஆறு தரப்பு பேச்சுவார்த்தையின் தற்போதைய நான்காம் சுற்றிலேயே இந்த இணக்கப்பாடுகள் காணப்பட்டுள்ளன.

பீஜிங்கில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையில் வடகொரியா, தென்கொரியா அமெரிக்கா, ரஷ்யா,ஜப்பான் ஆகிய நாடுகள் பேச்சுவார்த்தைகளை முன்நின்று நடாத்தும் நோக்கில் மேற்படி நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போதே தமது நாட்டின் சகல விதமான அணுத்திட்ட நடவடிக்கைகளையும் கைவிடுவதற்கு வடகொரியா இணங்கியுள்ளது.

மேலும் வடகொரியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் அணுசக்தி நிறுவனப் பிரதிநிதிகள் சோதனைகளை நடாத்துவதற்கும் அனுமதிப்பதாகவும் அந்நாடு அறிவித்துள்ளது.

இதே வேளை வடகொரியாவை தாக்குவதற்கான எண்ணம் எதுவும் இல்லை என அமெரிக்கா தெரிவித்தள்ளது.

பீஜிங்கில் இதுவரை நடைபெற்றபேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்படாத நிலையில் நேற்றைய பேச்சுவார்த்தையில் திருப்பு முனை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆப்கானிஸ்தான் பொதுத்தேர்தல் வாக்கு எண்ணும் பணி ஆரம்பம்

ஆப்கானிஸ்தானில் வாக்குகள் எண்ணும் பணிகள் தொடர்கின்றன. 1969ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆப்கானிஸ்தானில் முதலாவது தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆப்கானிஸ்தானில் தேசிய சபைக்கென 249 பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்காக இத்தேர்தல் நடைபெற்றது.

இப்பிரதிநிதிகளுள் 68 பெண்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளமையும் விசேட அம்சமாகும். ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு இம்முறை தேர்தலில் வாக்களிப்பதற்கான உரிமைகள் வழங்கப்பட்டது.

இதேவேளை ஆயுததாரிகள் தேர்தலை குழப்பும் நோக்குடன் பல தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதல்களில் சர்வதேச அமைதி காக்கும்படையில் கடமையாற்றிய பிரான்ஸைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் பலியானதுடன், பொலிஸ் அதிகாரி ஒருவரும் காயமடைந்துள்ளார்.

இந்த மோதல்களில் மூன்று ஆயுததாரிகள் உயிரிழந்ததாக ஆப்கானிஸ்தான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சூறாவளி தாக்கிய நியூஓர்லியன்சில் நச்சுக்கலப்பா? நிபுணர்கள் மறுப்பு

(நியூ ஓர்லியன்ஸ்)

கற்றினா சூறாவளி தாக்கிய அமெரிக்காவின் நியூஓர்லியன்ஸ் மாகாணத்தில் வெள்ளப்பெருக்கும் சேதமும் இருந்த போதும் நச்சுக்கலப்பு உருவாகவில்லை என நிபுணர்கள் கூறியுள்ளனர்.

அமெரிக்காவில் நியூஓர்லியன்ஸ் பகுதியை சமீபத்தில் வீசிய சூறாவளி புரட்டிப்போட்டது. அங்கு தண்ணீரில் நச்சுக்கலப்பு இருக்கும் என்ற அச்சம் நிலவியது. தற்போது அங்கு கழிவு நீரின் தேக்கம் உள்ளதே தவிர தண்ணீரில் நச்சுத்தன்மை இல்லை என நிபுணர்கள் கூறியுள்ளனர்.

நோய்த்தடுப்பிற்கான பொது சுகாதார ஆய்வாளர் ஜெரி பென்னர் கூறுகையில்; "சுகாதாரத்திற்கு நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்த வாய்ப்பும் இல்லை" என்றார். கழிவு நீர்நீரேற்று நிலையங்கள் பழுதடைந்திருப்பதால் கழிவுநீர்த்தேக்கம் அதிகரித்துள்ளது. மக்கள் கழிவு நீரைக்குடிக்காமலோ அதில் மூழ்காமலோ இருந்தால் பெரிய பாதிப்பில்லை என்று சுகாதார நிபுணர்கள் கூறினர். பக்றீரியாக்களின் அளவு அதிகரித்து உள்ள போதும் பெரிய அளவில் நோய்த்தாக்கும் அபாயமில்லை. ஜெபர்சன் பாரிஷ் பகுதியில் தண்ணீர் மாசுபடவில்லை என்றாலும் அங்கு குழாயில் கிடைக்கும் தண்ணீரைக் குடிக்கப்பயன்படுத்த வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. தண்ணீரில் உலோகக்கலப்பு இருந்தபோதும் அது அபாயகரமான அளவில் இல்லை. இதுவரை நடந்த சோதனைகளில் தண்ணீரில் எண்ணெய்,உலர் சலவைக்குப் பயன்படும் திரவங்கள், பென்சீன் போன்ற இரசாயனங்கள் இருப்பதற்கான ஆதாரமில்லை. அவ்வாறு இருந்தாலும் அவை சூரிய ஒளியில் காய்ந்தால் அபாயகரமில்லை. எண்ணெய்க் கசிவுகளை அகற்ற அப்பகுதியில் நடவடிக்கை தொடங்கியுள்ளது.

அமெரிக்கக் கடலோர காவல்படையினர் கூறுகையில்; கற்றினா சூறாவளிக்குப் பின்னர் லூசியானா மாகாணத்தில் ஆறு முக்கிய எண்ணெய்க் கசிவுகள் தவிர்க்கப்பட்டன. மிசிசிப்பி நதியில் நேரடியாக அவை கலப்பது தவிர்க்கப்பட்டது. நியூஓர்லி யன்ஸ் கிழக்குப் பகுதியில் மர்பி எண்ணெய் கம்பனிக்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிலையம் உட்பட பல்வேறு இடங்க ளில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பெரல் எண்ணெய்க் கசிவு இருந்தது. அவற்றில் 50 ஆயிரம் பெரல்கள் மீட்கப்பட்டன." எனத் தெரிவித்தனர்.



கடந்த 30 வருடகாலமாக நடைபெற்று வந்த கொடிய யுத்தத்தின் பின்னர் நேற்று முன்தினம் ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது தனது வாக்குச்சீட்டைப் பெட்டிக்குள் இடும் சனாதிபதி ஹமிட்ஹர்சாய்.



சூறாவளியால் பாதிக்கப்பட்ட லூசியானா, நியூ ஓர்லியன்ஸ் நகரில் அமைந்துள்ள புனிதமேரி சிலையின் தோற்றம்.

# மக்களின் பணத்தை கொள்ளையடித்த பெனாசிர், நவாஸ் நாடு திரும்ப முடியாது

-முஷாரவ்



(நியூயோர்க்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர்களான பெனாசிர் பூட்டோ மற்றும் நவாஸ் ஷெரீப் இருவரும் நாட்டின் பணம் ரூபா ஒன்பதாயிரம் கோடியை அபகரித்துச்சென்று விட்டனர். மக்கள் பணத்தைக் கொள்ளையடித்த இவர்களை மீண்டும் நாட்டிற்குள் அனுமதிக்க மாட்டேன்" என அதிபர் முஷாரப் ஆவேசமாகக் கூறியுள்ளார்.

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் கடந்த வெள்ளியன்று நடந்த கலந்துரையாடலில் பங்கேற்ற அதிபர் முஷாரப் கூறியதாவது; நாட்டின் பணம் ரூபா.ஒன்பதாயிரம் கோடியை அபகரித்து விட்டனர். முன்னாள் பிரதமர்களான பெனாசிர் பூட்டோவும், நவாஸ் ஷெரீப்பும் மக்களின் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்ற அவர்கள் மீண்டும் நாட்டுக்கு திரும்பமுடியாது. அரசியலில் ஈடுபட அனுமதிக்கவும் மாட்டோம். பெனாசிர் பூட்டோ தற்போது ஜெனீவாவில் தங்கியிருக்கின்றார். பிரதமராக இருந்த போது சட்டவிரோத பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டது தொடர்பாக சுவிஸ் நீதிமன்றில் ஆஜராகி வருகிறார். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாத இக்கட்டான நிலையில் தவிக்கிறார். நாடு கடத்தப்பட்ட ஷெரீப் தற்போது ஜெட்டாவில் உள்ளார். எனினும் பெனாசிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் 2007இல் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிட எந்தத்தடையும் இல்லை இவ்வாறு முஷாரப் கூறினார்.

# ஜேர்மனியின் பொதுத் தேர்தல் கன்சவேட்டிவ் கட்சிக்கு வெற்றி

ஜேர்மனியில் நடந்துமுடிந்த பொதுத்தேர்தலில் அஞ்சலா மாட்டினின் கன்சவேட்டிக்கட்சி மிகக்குறைந்த பெரும்பான்மையைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. இதன்மூலம் ஜேர்மனியின் முதலாவது பெண் அதிபராகப் பதவியேற்கும் வாய்ப்பு இவருக்கு கிடைக்கவுள்ளது.

இதேவேளை தற்போது ஜேர்மனியின் அதிபராக உள்ள ஜெகாட் தோல்வியை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளார்.

இதனால் ஜேர்மனியில் பலமாரங்கள் அரசியல் ஸ்திரமற்ற நிலை ஏற்படும் என ஜேர்மனி அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஜேர்மனியில் 613 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத் தேர்தலில் தற்போதைய அதிபர் ஜெகாட்டின் கட்சியைவிட அஞ்சலா மாட்டினின் கட்சி மூன்று ஆசனங்களை மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளது.

இதேவேளை தனது கட்சிக்குக் குறைந்த பெரும்பான்மையே இருப்பதால் லிபரல் சுதந்திர சனநாயகக் கட்சியுடன் கூட்டணியை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் அஞ்சலா மாட்டின் ஈடுபட்டுள்ளார்.

# குர்திஷ் இன பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 23 பேர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொலை

(பாக்தாத்)

ஈராக்கில் குர்திஷ் இனத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட 23 பேரைத் தீவிரவாதிகள் படுகொலை செய்துள்ளனர்.

ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு 80 கிலோ மீற்றர் வடக்கே டைகிறிஸ் ஆற்றில் பயங்கர வாதிகளினால் சுடப்பட்டு வீசப்பட்டிருந்த 24 பேரின் சடலங்களை ஈராக்கிய பொலிசார் மீட்டுள்ளனர். ஈராக்கின் அரசியல் சாசனத்தை சில சட்ட திருத்தங்களுடன் வரைந்து அதனை அச்சிட்டு ஐ.நா. விடம் கொடுப்பதற்கு கூடிய நாடாளுமன்றத்தின் கூட்டத் தொடரில் பங்கேற்பதாக தலைநகர் பாக்தாத்திற்கு சென்றுகொண்டிருந்தவர்கள் இவ்வாறு சுடப்பட்டு கொல்லப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# கறுப்பின மக்களை அமெரிக்கா வேண்டுமென்றே புறக்கணித்தது

-ஐ.நா.சபையில் முகாபே

சட்டவிரோதமான பேரழிவை உண்டுபண்ணிய ஈராக் ஊடுருவலில் பங்குகொண்டதன் மூலம் பிரிட்டன் வஞ்சகமான முறையில் நடந்துகொண்டுள்ளதாக சிம்பாப்வே சனாதிபதி முகாபே கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமெரிக்காவில் பெரும் அழிவுகளை ஏற்படுத்திய சூறாவளியினால் வீடுகளை இழந்த கறுப்பின மக்களை அமெரிக்கா வேண்டுமென்றே புறக்கணித்துள்ளதாகவும் கூறிய அவர் சிம்பாப்வேக்கு எதிராகத் தடைகளை விதிக்கவேண்டுமென சிம்பாப்வேயின் குடியேற்ற ஆட்சியாளர்களான பிரிட்டன், ஐரோப்பிய இராஜதந்திரிகளைத் தூண்டியதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை பல்வேறு அனர்த்தங்கள் ஏற்பட்டவேளைகளில் இந்த ஏகாதிபத்தியவாத நாடுகள் தங்களை நன்கொடையாளர்களாகவும், சர்வதேசப் பாதுகாவலர்களாகவும் காட்டிக் கொள்வதன் மூலம் ஊடகங்களின் அதிகாரத்தை வைத்துக் கொண்டு துஷ் பிரயோகம் செய்வதாகவும் சிம்பாப்வே சனாதிபதி தனதுரையில் சாடியுள்ளார்.

# பாதிப்புற்ற மக்களுக்கான மனிதாபிமான உதவியளிப்பதில் சிறிலங்கா அரசு பாராமுகம்

## பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம்

(திருமலை)

**கிழக்கில் யுத்தம் மற்றும் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சரிவரக் கிடைப்பதாக இல்லை. தற்காலிக குடியிருப்புக்கள் இன்னும் சரிவரகடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கவில்லை. மழைகாலம் நெருங்குகின்றது. பாராளுமன்றத்தில் நாம் பலமுறை எடுத்துச் சொல்லியும், செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றே அமைந்து விட்டது என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் குறிப்பிட்டார்.**

"தாய் தந்தையரை இழந்த குழந்தைகள் என்ற நிலை ஏற்படக்கூடாது. யுத்தத்தினால் அநாதைகளான குழந்தைகளுக்கென்று இல்லங்கள் அமைக்கப்படும் நிலை எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது. அவ்வாறு இல்லங்கள் அமைக்கப்படும் சூழ்நிலை உருவாகாமல் இருப்பதை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.

திருமலைமாவட்ட புனர்வாழ்வுக் கழகப்பிரதிப் பணிப்பாளர் தி.குமரகுருபரன் பேசும் போது: தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பில் அன்பு இல்ல நிர்வாகத்தை நீதிமன்றம் ஒப்படைத்ததிலிருந்து அன்பு இல்ல நிர்வாகத்தை சீர்படுத்தும் நடவடிக்கைகளைப் புனர்வாழ்வுக்கழகம் மேற் கொண்டு வருகிறது என்று குறிப்பிட்டார்.

மோல்டீஸர் இன்ரநெஷனல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மரேன் பீச் பேசும் போது தமது அமைப்பு 'அன்பு இல்ல' அமைப்பின் வளர்ச்சிக்கு மேலும் உதவிகளை வழங்கும் என்று உறுதியளித்தார். திருமலை சிறுவர் நன்னடத்தை அதிகாரி கந்தசாமி பேசும் போது, நீதிமன்றம் ஊடாக அன்பு இல்லம் நிர்வாகம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் கையளிக்கப்பட்டதை அடுத்து அன்பு இல்லத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக ஒழுக்கம் பேணப்படுகின்றது என்று தெரிவித்தார்.

அன்பு இல்ல நிர்வாகத்தின் செயலாளர் திருமதி இராஜேஸ்வரி தட்சணாமூர்த்தி நன்றி கூறினார். (25)

# கட்டுமான வேலைகளுக்கு நீர் பெறுவதில் சிரமம்

(மல்லாவி)

முல்லை.மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தேறாங்கண்டல் கிராமத்தில் நேப் திட்டத்தின் மூலம் 25 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற போதும் இதன் கட்டுமான வேலைகளுக்கு நீர் பெறுவதற்கு பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர்

மேற்படி கிராமத்தில் வீடுகளை நிர்மாணிக்க கட்டுமான வேலைகளுக்கு பவுசர்கள் மூலம் நீண்ட தூரம் கொண்ட பிரதேசங்களுக்குச்சென்று தண்ணீர் பெற்று வீடுகளை அமைத்து வருகின்றனர். இதன் போது ஒரு பவுசர் தண்ணீர் 400ரூபாவுக்கு வீட்டுரிமையாளர்கள் பெற்று வருகின்றனர். (24)

# மாணவர்கள் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 2004 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெய்திய மாணவர்களில் கிளிநொச்சி இலங்கை வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கினை வைத்திருந்த ஐந்து மாணவர்களுக்கு தலா ரூபா பத்தாயிரம் வழங்கிகௌரவிக்கப்பட்டனர்.

மேற்படி நிகழ்வுநேற்று முன்தினம் கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையில் வங்கிமுகாமையாளர் தர்மபாலா தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் கிளி. வலயக்கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, இலங்கை வங்கி பிரதேச முகாமையாளர் எஸ்.திருச்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்குபத்தாயிரம் ரூபாவிற்கான கணக்கு சான்றிதழ்களை வழங்கிக்



கௌரவித்தனர்.

கிளிநொச்சி திருவையாறு ம/வி மாணவன் நா.சுடர்வண்ணன், கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை மாணவன் ய.ஹரிராம்,கிளி/ம.வி. மாணவி செ.கௌசிகா, வவுனியா இறம்பைக்குளம் ம/வி மாணவி கி.யுலக்ஷினி, கிளி/ முழங்காவில் ம/வி மாணவி சி.தாரணிஆகிய ஐவருமே பத்தாயிரம் ரூபாவிற்கான கணக்கு சான்றிதழ் பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சோ)

# 8 வருடங்களாக இடம் பெயர்ந்தோர் முகாமில் வாழும் மக்களின் அடிப்படை வசதிகளை வழங்கக் கோரல்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் மல்லாவி நகர் பகுதியில் அமைந்த குமுதன் குடியிருப்பு மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி இருந்து வருகின்றனர்.

மேற்படி குமுதன் குடியிருப்பில் சுமார் 95 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன இவர்கள் அனைவரும் 1995 ஆண்டு இடம் பெற்ற சூரிய கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்தனர். மீளவும் தங்கள் வாழ்விடங்களுக்குசென்று வாழ முடியாத நிலையில் இருந்து வருகிறார்கள் காரணம் இவர்களின் வாழ்விடங்கள் சிறிலங்கா' இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயம் என்பதால் குடியமர முடியாத நிலையில் இருந்து வருகின்றனர். இவர்களுக்கான நிரந்தர வதிவிடங்கள் இன்றியும் குடிநீர் பெறமுடியாத நிலையிலும் தாங்கள் அமைத்த சிறு கொட்டில்களில் வாழ்ந்து வருகின்றனர். எட்டு வருடங்களுக்கு மேல் இம் மக்கள் இக்குடியிருப்புப் பகுதியில் வாழ்ந்து வருகின்றமையால் இவர்களுக்கான காணிகளை வழங்கி ஏனைய அடிப்படை வசதிகளைத் தரும்படி மக்கள் சம்பந்தப்பட்ட வர்களிடம் கேட்டும் இற்றை வரையும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் மக்கள் கவலையுடன்வாழ்ந்துவருகின்றனர். (24)

# "போருக்கான இறுதி அழைப்பு" செல்வாநகரில் எழுச்சி நிகழ்வு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தின் செல்வாநகர் பகுதியில் போருக்கான இறுதி அழைப்பும் வீட்டுத் தரிசிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் செல்வா நகர் பகுதியில் அமைந்த பொது நோக்கு மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு முல்லை மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைபொறுப்பாளர் செ.முரளி தலைமையில் இடம் பெற்றன.

மேற்படி நிகழ்வில் செல்வாநகர் பகுதியெங்கும் போர் முரசு ஒலிக்கப்பட்டு வீடுவீடாக சென்று போருக்கான இறுதி அழைப்புக்கான கருத்தூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நிகழ்வுகளில் துறைசார்ந்த பொறுப்பாளர்கள் பரப்புரை போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டு வருவதால் மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுகின்றனர். இந் நிகழ்வுகள் தொடர்ந்து பல கிராமங்களில் இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது .(24)

# சேதுசமுத்திரத் திட்டத்தால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி மன்னாரில் ஆராய்வு

(மன்னார்)

மன்னாரில் சேது சமுத்திரத் திட்டம்தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறை ஒன்று நேற்று முன் தினம் மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசக் கட்டடத்தில் இடம்பெற்றுள்ளது.

மீனவ அபிவிருத்தி நிறுவனத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், நீர்கொழும்பு மீனவ மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் இணைப்பாளர், அதன் செயலாளர், மன்னார் மாவட்ட மீன்பிடி விரிவாக்க அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர். மன்னார் மாவட்ட சகல மீனவ கிராமங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 70 இற்கும் மேற்பட்டோர்இப் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டனர்.இதன்போது சேது சமுத்திரத்திட்டத்தால் ஏற்படும் பாதிப்புக்கள், தாக்கங்கள் போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்பட்டன(18)

# முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கப்பொருட் கண்காட்சி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் பூநகரிப் பிரதேசத்தில் பூநகரி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டுவரும் இருபது முன்பள்ளிகளது சிறார்களின் ஆக்கப்பொருட் கண்காட்சி ஒன்று 13ஆம் திகதி பூநகரி அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழக வளாகத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

காலை 10.00 மணியளவில் முன்பள்ளிக் கட்டமைப்புத் தலைவர் கிருஸ்ணசாமி தலைமையில் இடம்பெற்ற இக்கண்காட்சி நிகழ்வின்ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கேற்றப்பட்டதையடுத்து தேசியக்கொடி, தமிழர் புனர்வாழ்வுக்கழக கொடி,பூநகரி அபிவிருத்திப்புனர்வாழ்வு நிறுவனக்கொடி கண்காட்சிகளில் பங்கெடுத்த இருபது முன்பள்ளிக்கொடிகள் என்பன ஏற்றிவைக்கப்பட்டன.

இதனைத்தொடர்ந்து நிகழ்விற்கு வருகைதந்த விருந்தினர்கள் முன்பள்ளி ஆசிரியர்களாலும் முன்பள்ளி சிறார்களாலும் கண்காட்சி மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டதையடுத்து கண்காட்சி மண்டபத்தினை ஓய்வு பெற்றஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளரும், முன்பள்ளிக் கட்டமைப்புத் தலைவருமாகிய சிவநாதன் நாடாவை வெட்டி கண்காட்சியைஆரம்பித்துவைத்தார். சிறார்களின் சிந்தனைத்திறனையும் சமூகப்பற்றுணர்வுகளையும் வெளிப்படுத்தும் வகையில் கைத்தொழில், விளையாட்டு உபகரணங்களென பலதரப்பட்ட கருத்தம்சங்களைப் பிரதிபலிக்கும் வகையிலான ஓவியங்கள் மற்றும் பல்வேறு வடிவங்களை உள்ளடக்கியதாக அமையப் பெற்றுள்ள இந்த ஆக்க பொருட் கண்காட்சியானது நிகழ்விற்கு வருகை தந்திருந்த அனைவரையும் வியப்பிலும் மகிழ்ச்சிலும் ஆழ்த்தியி ந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று முழங்காவில் பிரதேசத்திலும் முன்பள்ளிச் சிறார்களது கண்காட்சிகள் வெகு சிறப்பாக இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரு வெவ்வேறு இடங்களில் இடம்பெற்று நிறைவுபெற்ற இந்தக் கண்காட்சி நிகழ்வுகளில் பாடசாலைஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்களெனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

# திருமலை -மூதூர் கடல்வழிப் பயண படகுச் சேவை முற்றாக ஸ்தம்பிதம்

## - நான்கு படகுகளும் பழுதடைந்தன

(திருமலை)

திருகோணமலை- மூதூருக்கிடையேயான கடல் வழிப் பயணிகள் படகுச்சேவை முற்றாக ஸ்தம்பித்துள்ளது. சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த நான்கு பயணிகள் படகுகளும் பழுதடைந்ததே இதற்குக்காரணமாகும்.

உடனடியாக நடவடிக்கை எடுத்து திருமலை-மூதூர் கடல் வழிப் பயணிகள் படகுச்சேவையை சீராக்கும்படி திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ண சிங்கம் துறைமுகங்கள் மற்றும் விமானப்போக்கு வரத்து அமைச் சருக்குஅவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

பயணிகள் படகுச்சேவை ஸ்தம்பிதமடைந்திருப்பதால் நோயாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளர். என்றும் பாரா்ளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் அமைச்சருக்கு பக்ஸ் மூலம் அனுப்பிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூதூர் மக்கள் திருகோணமலை நகருக்கு வந்துபோவதற்கு இலகுவான போக்குவரத்தை கடல் வழி படகுச்சேவையே வழங்கிவந்தது என பதும் அமைச்சருக்கு தெரிவிக் கப்பட்டுள்ளது. அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியை சனாதிபதி ,பிரதமர் ஆகி யோருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் அனுப்பி வைத்தார். (25)




கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தினரால் நடாத்தப்பெற்று கணிணிப பயிற்சி நெறியில் சித்தியெய்திய மாணவ மாணவிகளுக்கு அண்மையில் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். சித்தியெய்திய மாணவன் ஒருவருக்கு கிளிமாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் சான்றிதழ் வழங்கி கௌரவிப்பதனை படத்தில் காணலாம். .(படம்:சோதி)

# தமிழர் பிரச்சினையில் அரசின் நழுவல் போக்கை அக்குவேறு ஆணி வேறாக வெளிப்படுத்துவோம்

## பொங்கு தமிழுக்கு அரச உத்தியோகத்தர் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

**பொங்கு தமிழினை மிக வெற்றிகரமாக நடத்த வேண்டிய வரலாற்றுக் கட்டாயம் ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு. கடந்த மூன்றுவருடங்களாக சிறிலங்கா அரசு தமிழர் பிரச்சினை தொடர்பாக கடைப்பிடித்து வரும் நழுவல் போக்கை சர்வதேசத்திற்கு அக்கு வேறு ஆணி வேறாக வெளிப்படுத்துவோம் என வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.**

2002 இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை சிறிலங்கா அரசு சரிவர அமுல் செய்யத் தவறியது. ஆறு கட்டப் பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னெடுக்கப்படவில்லை.பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. புலிகளுடனான நிழல் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. இடைக்காலத்தன்னாட்சி வரைவும் நிராகரிக்கப்பட்டது. சுனாமிப் பொதுக் கட்டமைப்பு சிறிலங்கா நீதித்துறையால் தடை செய்யப்பட்டது.

2001இல் பொங்கு தமிழில்தமிழரின் அபிலாசைகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தினோம். 2005 இல் எமது அபிலாசைகளை சிறிலங்கா அரசு நிறைவேற்றாவிட்டால் நாம் என்ன உத்தேசித்துள்ளோம் என்பதை வெளிப்படுத்திவோம் என அச்சங்கம் தெரிவித்துள்ளது. (28)

## சிறி. புலனாய்வுத் துறையின் நடமாட்டம் இணுவில் பகுதியில் மீண்டும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். இணுவில் பகுதியில் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினரின் நடமாட்டங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன என்று அப்பகுதி வாசிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இணுவில் பகுதியில் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் அண்மையில் கொலை செய்யப்பட்டார். இந்தக்கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்தே இத்தகைய இராணுவ புலனாய்வுத் துறையினரது நடமாட்டங்கள் இங்கு அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு இணுவில் பகுதியில் உள்ள மூலை முடுக்குகள் எங்கும் நடமாடும் இராணுவப் புலனாய்வுத் துறையினர் பொதுமக்களிடம் பொலிஸ் அதிகாரி சார்ள்ஸ் விஜேவர்த்தனாவின் கொலை தொடர்பாக விசாரணைகளைச் செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதனால் அப்பகுதி மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளதுடன் இளைஞர், யுவதிகள் வீதிகளில் நடமாடவும் அச்சம் தெரிவிக்கின்றனர். (33)

## சாவகச்சேரி நகரை நவீன மயமாக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். சாவகச்சேரி நகரை நவீன மயமாக்கி அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட இந் நகரம் நவீனமயமாக்கப்பட்டு அபிவிருத்தி, செய்யப்பட வேண்டியதன் அவசியங்களை உணர்ந்தே இந் நகர அபிவிருத்தித் திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளது.

இந் நகர அபிவிருத்தியில் வீதி அபிவிருத்தி, பொது இடங்களை அபிவிருத்தி செய்தல், கழிவகற்றல் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல், தொழில் துறை விரிவாக்கம் போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் உள்ளடக்கப்படும்.

இவ் அபிவிருத்திக்கான திட்டமிடல்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகம், தமிழீழ நிர்வாக சேவை, தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் திட்டமிடல் அதிகாரிகள் ஆகியோரது ஆலோசனைகளின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும், இத் திட்டம் 2006 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்படும் என்றும் அரச அதிபர் கணேஷ் மேலும் கூறினார். (33)

# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த ஒரே வழி தமிழீழ அரசை சர்வதேசம் அங்கீகரிப்பதே!

## :யாழ் மாவட்ட பா.உ சிவநேசன்

(யாழ்ப்பாணம்)

யுத்தம் இன்றி இலங்கைத்தீவில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவதாயின் அதற்கு ஒரே வழி தமிழீழ அரசை சர்வதேசம் அங்கீகரிப்பதேயாகும் இந்த உண்மைநிலையை உலக அரங்கில் பறைசாற்றுவதற்காக பொங்குதமிழ் - 2005 இல் தமிழர் அனைவரும் ஒன்றுதிரள்வோம் என தமிழ் தேசியக் கூட்டமைப் பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் தெரிவித்துள்ளார்.நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற தனியார் போக்குவரத்துச் சேவையாளர்களுடனான ஒன்றுகூடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

சமாதானப் பேச்சுகள் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண்பதற்காக நாம் முயன்ற போதும் அதற்குச் சாதகமான பதிலை வெளிப்படுத்தாத அரசாங்கம், விடுதலைபுலிகள் மீதும். தமிழ் மக்கள் மீதும் நெருக்கடிகளைத் திணித்து சமாதானத்துக்கு ஆப்பு வைப்பதற்கான முயற்சிகளில் தீவிரம் காட்டி வருகிறது. எனவே இலங்கை அரசின் அரசியல் தலைவர்கள் மீது நம்பிக்கை இழந்த நிலையில் மீண்டும் மீண்டும் எம்மால் அவர்களிடம் சமாதானத்துக்காக கையேந்தி நிற்க முடியாது என்பதை சர்வதேசத்திடம் எடுத்துக்காட்டுவதுடன் எமது இனத்தையும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டும் தாயகம்,தேசியம், தன்னாட்சி உரிமையுடன் நாம் வாழ வழி சமைக்க வேண்டும் தமிழ்மக்களுக்கான அரசியல் உரிமைகளை சிங்கள தேசம் தானாக வழங்க வேண்டும். இல்லையேல் அவர்களைப் பிரிந்து செல்ல விடவேண்டும் போன்ற கோரிக்கைகளை சர்வதேசத்தின் முன்பாக வைத்து போராடவேண்டும் இதற்கான சந்தர்ப்பமாக எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள "பொங்குதமிழ்-2005 "ஐ அனைவரும் பயன்படுத்த வேண்டும்.

தமிழ் இனத்தின் விடுதலையை சர்வதேசம் அங்கீகரிப்தற்காக பொங்கு தமிழ் எழுச்சி மூலம் நாம் அனைவரும் ஒன்றுபட்டுக் குரல்கொடுக்க அணிதிரளவேண்டும் என்றும் அவர் அறைகூவல் விடுத்தார். (33)

# மீன்பிடி இறங்கு துறைகளை ஆழப்படுத்தும் பணி முழு வீச்சில்

(வடமராட்சி)

கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் மூழ்கடிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதியிலுள்ள மீன்பிடி இறங்கு துறைகளை ஆழப்படுத்தும் பணி தற்போது மீண்டும் முழுவீச்சில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசினது உதவிகள் எதுவும் இதுவரை கிட்டியிருக்கவில்லையாயினும், அரச சார்பற்ற அமைப்புக்களினது உதவியுடன் இவ் இறங்கு துறைகளை ஆழப்படுத்தும் பணி தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக கடந்த கால போர் அனர்த்தங்களினால் இம் மீன்பிடி இறங்குதுறைகள் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக ஆழப்படுத்தப்படாதிருந்தது சிறிலங்கா அரசும் இவ் விடயம் தொடர்பில் அக்கறையற்றிருந்தது.

எனினும் அரசு புலிகளிற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை யடுத்து இப் பகுதிகளில் மீன் பிடித் தொழிலில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்த போதும் இறங்கு துறைகள் ஆழப்படுத்தப்படாமையினால் பல நெருக்கடிகள் எழுந்திருந்தன.

குறிப்பாக இறங்கு துறைகளில் குவிந் திருந்த கடற்பாறைகளில் மோதி பல மீன்பிடிப் படகுகள் மூழ்கியிருந்தன.

இந் நிலையில் இம் மீன்பிடி இறங்குதுறைகளை ஆழப்படுத்த அவ்வப் பகுதி கடற்றொழில் அமைப்புக்கள் தாமதமாக முன்வந்திருந்த போதும் பாதுகாப்பு காரணங்களைக் காட்டி படைத் தரப்பு அனுமதி மறுத்து வந்திருந்தது.

எனினும் கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் இவ் இறங்கு துறைகள் முற்றாக மூழ்கடிக்கப்பட்டதையடுத்து மீன்பிடித் துறை முற்றாக முடங்கியிருந்தது.

எனினும் அரசினது உதவிகளோ இதுவரை கிட்டியிராத நிலையில் தொண்ட ரமைப்புக் களது உதவியுடன் கடற்றொழில் அமைப்புக் கள் நேரடியாக மீன்பிடி இறங்கு துறைகளை ஆழப்படுத்தும் பணியை ஆரம்பித்துள்ளன. (27)

## வடபிராந்திய போ.வ.சபைக்கு திறைசேரி நிதி அனுப்புதல் தாமதம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு திறைசேரியினால் அனுப்பி வைக்கப்படவேண்டிய நிதி காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படுவதில்லை என போக்குவரத்துச் சபை அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக தென்னிலங்கை அரசியலில் ஏற்பட் டுள்ள முரண்பாடான சூழ்நிலைகளாலும், அங்கு நிலவுகின்ற அரசியல் இழுபறி, அதிகாரப் போட்டிகளாலும் இந்த நிதி அனுப்புதல்களில் காலதாமதம் ஏற்படுகின்றது. இதன் காரணமாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் நிதி நிர்வாகச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். அரசியல் குழப்பநிலை காரணமாக நிதி அனுப்புதலில் ஏற்பட்டுள்ள தாக்கங்களை தவிர்த்து காலக்கிரமத்தில் உரிய நிதி ஒதுக்கீடுகளை வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்று திறைசேரி அதிகாரிகளிடம் போக்குவரத்துச் சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

## மிதிவெடி அகற்றிய பிரதேசம் பொதுமக்களிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மல்லாகம் பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசம் பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

டென்மார்க்கைச் சேர்ந்த டெனிஸ் கண்ணி வெடிகள் அகற்றும் பிரிவினரால் கண்ணிவெடி அபாயத்திலிருந்து மீட்கப்பட்ட பிரதேசமே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் பழைய நீதிமன்றவளாகத்தை அண்டிய பகுதிகளில் சிறிலங்காப் படையினரால் மிதிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்த 18 ஆயிரத்து 479 சதுர மீற்றர் நிலப்பரப்பே இவ்வாறு மிதிவெடிகள் அகற்றப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் இதுவரை காலமும் காணப்பட்ட மிதிவெடி அபாயம் காரணமாக அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மீளக் குடியமர முடியாது பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (33)

## வடமராட்சி பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி ஆசிரியர் பற்றாக்குறை

(வடமராட்சி)

யாழ்.வடமராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி ஆசிரியர் வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாத நிலையில் உள்ளது என வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் செல்வராஜா கவலை தெரிவித்துள்ளார்.இதனால் வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் பல வற்றில் ஆரம்பக்கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.வடமராட்சிக் கல்விவலயத்தில் உள்ள பாடசாலைகளில் சுமார் 90 ஆரம்பக்கல்வி ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன.

நீண்டகாலமாக இவ் வெற்றிடங்கள் நிரப்பப்படாது உள்ளமையால் இங்குள்ளபாடசாலைகள் பலவற்றில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது இக்கல்விவலயப் பாடசாலைகளில் தமது ஆரம்பக் கல்வியை தொடர்ந்து வரும் மாணவர்களின் கல்வி எதிர்காலத்தையும், கற்றல் செயற்பாடுகளையும் வலுவாகப் பாதித்துள்ளது.

இவ்வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட்டு இங்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்த்துவைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும்அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (33)

## மதுபானக் கடையை அகற்றுமாறு கோரிக்கை

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்துக்கு அருகில் உள்ள மதுபானக் கடையை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கும் படி இப் பகுதி மக்கள் பருத்தித்துறை பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.பாடசாலை மற்றும் சிவன் கோயிலுக்கு அருகில் இந்த மதுபானக் கடை அமைந்துள்ளதால் கோயிலுக்கு செல்லும் மக்கள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை [illegible] எதிர்நோக்குவதாக முறைப்பாடு செய்துள்ளனர். (28)

# விஜயகாந்தின் எதிர்காலம் — அரசியலில் பிரகாசிக்குமா?

**எதிர்வரும்** தமிழக சட்டசபைத் தேர்தல் கலகலப்பாகவே இருக்கப் போகின்றது. அதற்கான எதிரொலிகள் தெரியத் தொடங்கியுள்ளன. இதுவரை சினிமாவில் கோலோச்சிய நடிகர்கள் எல்லாம் அரசியலில் கால் பதிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

அந்த வகையில் தான் இதோ வருகிறேன்... அதோ.... வருகின்றேன் என்று கூறிக்கொண்டிருந்த நடிகர் விஜயகாந்த் உண்மையிலேயே அரசியல் களத்தில் குதித்திருக்கின்றார். கடந்த 14 ஆம் திகதி தனது புதிய கட்சியினை ஆரம்பித்துள்ளார்.

வெண்புறாக்களையெல்லாம் பறக்கவிட்டு மிகவும் கோலாகலமாக ''தேசிய முற்போக்கு திராவிடக்கழகம்'' எனும் கட்சியினை நடிகர் விஜயகாந்த் தொடக்கியிருப்பது தமிழகத்தில் ஏனைய கட்சிகளை திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றது என்று தான் கூற வேண்டும்.

ஏனெனில் 2006 சட்டமன்றத் தேர்தல் மூலம் தமிழக முதல்வர் பதவியை குறிவைத்துதான் விஜயகாந்த் ரசிகர் மாநாட்டை மதுரையில் நடத்தியுள்ளார். மாநாட்டில், இதுவரைகாலமும் தமிழக முதல்வர்களாக இருந்தவர்களது பெயர்ப்பட்டியல் வைக்கப்பட்டிருந்தன. இதில் விசேஷம் என்ன வென்றால் 2006 என அந்த பட்டியலில் எழுதப்பட்டு, அதில் விஜயகாந்தின் உருவப்படம் ஒட்டப்பட்டிருப்பதுதான்!.

ஆக.... அரசியலுள்ள விஜயகாந்த் தமிழக முதல்வராகவே தான் வலம்வரத் திட்டமிட்டுள்ளார். என்பதும், அதனைத் துணிச்சலாக தமிழகத்திற்கு அறிவித்திருப்பதும் ஏதோ ஒன்றை சமிக்ஞை காட்டத் தவறவில்லை எனலாம்.

அதாவது தமிழகத்தில் ஆளும் கட்சியும் சரி, எதிர்க்கட்சியும் சரி விஜயகாந்துடன் கூட்டணி அமைக்க நினைக்குமானால், தமிழக முதல்வர் அவரே தான் என்பதை ஒத்துக் கொண்டுதான் ஆகவேண்டும். இல்லையேல் கூட்டணிக்கு அவரது கையை எதிர்பார்க்கக் கூடாது என்பதை அவர் மாநாட்டை தொடங்கிய போதே நசுக்காக அறிவித்திருக்கின்றார் என்று தான் நம்பத் தோன்று கின்றது.

விஜயகாந்தைத் தொடர்ந்து தமிழக முன்னணி கதாநாயகர்கள் பலரும் தமது ரசிகர் மாநாட்டை நடத்தினால் என்ன....?அதனை கட்சியாக மாற்றி எதிர்வரும் சட்டசபை தேர்தலில் தனித்தோ.... கூட்டணியாகவோ....? களமிறங்கினால் என்ன.... என்று பல விதமான வியூகங்களை வகுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தவகையில் நடிகர் சரத்குமார் தனது ரசிகர்கள் மாநாட்டை விரைந்து நடத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றார். இதனடிப்படையில் சரத்குமார் மன்ற மாநிலத் தலைவர் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மன்றங்களின் நகர, ஒன்றியக் கூட்டங்களை கூட்டி மாநாடு நடத்துவது குறித்து ஆலோசனை நடாத்தி வருகின்றார்.

இதேவேளை தி.மு.கவில் இணைந்து எம்.பியாக இருக்கும் சரத்குமார் எப்படி ரசிகர் மாநாட்டை நடத்த முடியும் எனப் பலரும் சந்தேகம் எழுப்பியிருக்கின்றனர் என்பதும் இல்லாமலில்லை.

இதேபோன்று சினிமாத்துறையில் ஓரளவு மவுசு குறைந்திருக்கும் கார்த்திக் கூட அரசியலில் வலம் வர விருப்பம் கொண்டுள்ளார். விஜயகாந்த் அரசியலுக்குள் உள் நுழையும் வேளை தாமும் நுழைய வேண்டுமென்று கார்த்திக் திட்டமிட்டதாக கூறப்படுகின்றது.

ஆனால் விஜயகாந்த் இதோ... அதோ.... என்று இன்று அரசியலில் காலடிவைத்தே விட்டார். ஆனால் கார்த்திக் இன்னும் ஓர் அடிகூட நகரவில்லை எனலாம்.

அந்தவகையில் ஆளும் அ.தி.மு.கவில் இணையத்தான கார்த்திக் ஆரம்பத்தில் மிகவும் ஆவலாக இருந்தார். ஆனால் அங்கே இவர் எதிர்பார்த்த மாலை மரியாதை கிடைக்கவில்லை என்றும், அதனையடுத்தே சரணாலயம் அமைப்பை உருவாக்கியதாகவும் புகைகின்றது.

இதேவேளை சரணாலயம் அமைப்பால் கார்த்திக் நினைத்த மாதிரி ரசிகர்கள் பட்டாளம் திரள்வதை நாடி பிடித்துப் பார்த்து கார்த்திக் மிக உற்சாகமாக இருக்கின்றார். இப்போது அ.தி.மு.கவின் பார்வை சரணாலயம் அமைப்பு மீது விழுந்திருப்பதாகவும் அதனால் நிச்சயம் கார்த்திக் அ.தி.மு.கவில் இணையக்கூடும் எனும் எதிர் பார்ப்பும் எழுந்திருக்கின்றது.

இதேவேளை முன்பு அ.தி.மு.க மதிக்கவில்லை என்பதால் சரணாலயம் அமைப்பு அ.தி.மு.கவிடம் சரணாகதி அடைய மாட்டாது என்றும் ஆரூடம் கூறப்படுகின்றது.

ஆனால் கார்த்திக்கின் பின்னால் அணி திரளும் ரசிகர்கள் அ.தி.மு.கவுக்கு பலமாக இருக்கும் முக்குலத்தோர் என்பதால கார்த்திக் என்னதான் செய்யப் போகின்றார் என்பது வினாதான் எனலாம்.

இவ்வாறு திரையுலகத்தவர்களான விஜயகாந்த், சரத்குமார், காத்திக் போன்றோர் அரசியலுக்குள் நிலையாக நிறுத்திக் கொள்ள புதிய பாதையில் நடக்கின்றனர்.

ஆனால் இவர்களுக்கு முன்பே அரசியலுக்குள் குதிக்க இருந்த நடிகர் ரஜனிகாந்த் மட்டும் இன்னும் மௌனமாகவேதான் இருக்கின்றார். ஏனெனில் பாபா திரைப்படம் படுதோல்வியடைந்ததையடுத்து ரஜனிகாந்த் அதல பாதாளத்தில் தள்ளப்பட்டதாக விமர்சனம் எழுந்திருந்தது.

இதனால் அரசியலை விட்டு தூரமாகிப் போன ரஜனிகாந்த் இப்போது சந்திரமுகி திரைப்பட வெற்றியில் திளைத்திருக்கின்றார். அதனால் மீண்டும் ரஜனிகாந்த் அரசியலுக்குள் தடம் பதிக்க முற்படலாம்.... என்றும் அவரது ரசிகர்கள் மிகவும் ஆவலுடன் அதனை எதிர்பார்த்து இருப்பதாகவும் தெரிகின்றது.

இதனால் தான் எதிர்வரும் சட்டசபைத்தேர்தல் திரையுலக பிரபலங்களால் களைகட்டப் போகின்றது என்று நம்பமுடிகின்றது.

இதேவேளை நடிகர் விஜயகாந்தின் அரசியல் பிரவேசம் தமிழகத்தை ஆளும் கட்சியையும் எதிர்கட்சியையும் ஓரளவேனும் மிரள வைத்திருக்காமல் இருக்க முடியாது. ஏனெனில் விஜயகாந்த் தமிழக தென்மாவட்டங் களிலுள்ளவர்கள் அ.தி.மு.க மீது வெறுப்பில் இருப்பதாகவும், அவர்களை யெல்லாம் விஜயகாந்த் வளைத்துப் போட்டுவிட்டதாகவும் கூடத் தகவலுண்டு.

அது மட்டுமன்றி எதிர்கால தமிழக முதல்வர் பதவிதான் நடிகர் விஜயகாந்தின் இலக்கு. அதனால் இவரைத் தமது கூட்டணிக்கு இழுக்க நினைப்பவர்கள் அவரை தமிழக முதல்வர் பதவிக்கு அனுமதித்ததாகக் கொள்ள வேண்டும். அதனைத்தான் அவர் மாநாட்டில் 2006 தமிழக முதல்வர் என்று தனது உருவப்படத்தை ஒட்டி காட்டி இருக்கின்றார்.

ஆக... தமிழக பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க.விஜயகாந்தை கூட்டணிக்கு எதிர்பார்க்க மாட்டாது என்பதை உறுதிபடக் கூற முடியும்.

ஏனெனில் தி.மு.க கருணாநிதியைப் பொறுத்தவரை, எதிர்கால முதல்வர் மு.க.ஸ்டாலினே தான் என்பது முடிந்த முடிவாகும். எனவே விஜயகாந்தை தமிழக முதல்வராக தி.மு.க. ஆதரிக்கப் போவதில்லை

அடுத்து ஆளும் கட்சியான அ.தி.மு.க தனித்து போட்டியிடத் தான் நினைத்திருக்கின்றது. எனவே விஜயகாந்தை ஆளும் கட்சியும் தமது கூட்டணிக்கு ஆரம்பத்தில் இழுக்க வலை வீசுமா... என்பது சந்தேகம் தான்!



காஞ்சிபுரம், கும்மிடிபூண்டி இடைத்தேர்தல் போலவே தான் தமிழக சட்டசபைத் தேர்தலிலும் தமக்கு பெரும்பான்மை கிடைக்குமென்று ஆளும்கட்சி நடவடிக்கைகளை முடுக்கிவருகின்றது.

அந்தவகையில்தான் பல்வேறு சலுகைகள், இலவசதிட்டங்கள், புதிய சட்டங்கள் என்று தமது தேர்தல் வியூகத்தை எப்போதோ தொடங்கிவிட்டிருக்கின்றன.

எனவே தமிழக சட்டசபைத் தேர்தலில் தமக்கு இறங்கு முகத்திற்கு வாய்ப்பில்லை என்றே ஆளும் கட்சிதிட்டவட்டமாக நம்புகின்றது.

அதற்காக நடிகர் கார்த்திக், டி.ராஜேந்தர் போன்றோரை தம்முடன் இணைத்துக் கொள்ளவும் கூடும்.

சட்டசபைத் தேர்தலில் பெரும்பான்மை கிடைக்காது போனால் மட்டுமேதான் ஆளும்கட்சி தனது வியூகத்தை இறுதியில் மற்றோர் வடிவில் மாற்றக் கூடும்.

அதாவது தி.மு.கவை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக மட்டுமேதான் நடிகர் விஜயகாந்துடன்அதி.மு.காவை கூட்டணிக்கு தாவக்கூடும். அதுவும் தி.மு.கவை அரியணை ஏறவிடாது தடுத்து தமது பங்களிப்புடன் விஜயகாந்த் முதல்வரானால் தவறில்லை. தாம் சொல்வதை கூட்டணி தர்மத்திற்காக விஜயகாந்த் செய்தேதான் ஆக வேண்டும்..... என்பதற்காக மட்டும் அ.தி.மு.க அப்போது இவ்வாறு மாறக்கூடும்.

தற்போது விஜயகாந்த் கட்சி தொடங்கவுள்ளமை உறுதியானவுடனேயே மு.க.ஸ்டாலின் விஜயகாந்தை சாடைமாடையாக வசைபாடியுள்ளமை தெரிய வந்திருக்கின்றது. அதாவது எதிர்கால தமிழகமுதல்வர் ஆகலாம்... என்று சோதிடர் சொல்வதைக் கேட்டு பலரும் புதுக்கட்சி ஆரம்பிக்கின்றார்கள் என்று ஸ்டாலின் தனது இளைஞரணி கூட்டத்தில் கூறியுள்ளமை விஜயகாந்துக் காகத்தான் என்பது வெளிப்படை.

ஸ்டாலின் கூற்றை வைத்து பார்க்கும் போது தி.மு.கவிஜயகாந்தை தமது கூட்டணிக்கு இழுக்கும் முயற்சியில் ஈடுபடுவதாக முன்பு பத்திரிகைகள் கூறியது பொய்யான தகவல் என்பதையே இது காட்டி நிற்கின்றது.

இதேவேளை பா.ம.க ராமதாஸ் தி.மு.க கூட்டணியிலிருந்து விலக கூடும்... என்று இப்போது பரபரப்பு எழுந்திருக்கின்றது. ராமதாஸ் ஜெயலலிதாவுடன் உறவு கொண்டாடுவதாகவும் விரைவில் அ.தி.மு.க வசம் பாயக் கூடும் என்றும் நம்பப்படுகின்றது.


இதனால்தான் இம் முறை 2006 சட்ட சபைத்தேர்தல் மிகவும் சுவாரஸ்யமாக இருக்கப்போகின்றது என எதிர்பார்க்க முடிகின்றது. புதிய கட்சிகள் உதயம், நடிகர்களின் அரசியல் பிரவேசம், கூட்டணிகள் முறிவு, புதிய கூட்டணிகள் உருவாக்கம்... என கலகலப் பிற்கு.. பஞ்சமிருக்காது தே எனலாம்.

இதேவேளை தேர்தல் என்றாலே கூட்டணிகள், மாறுவது வழமை ஆனால் உண்மை என்று ஒன்றும் இருக்கின்றது. ஆரம்பகாலத்தில் சினிமா துறையிலிருந்து வந்தவர்களில் மறைந்த எம்.ஜி. ராமச்சந்திரன் மட்டுமேதான் அரசியலிலும் சினிமாவில் போன்று பிரகாசமாக இருந்தவர் மறைந்த சிவாஜி கணேசன் கூட சினிமாவில் உச்சத்திலிருந்தபோதே தான் அரசியலில் புகுந்து தோற்றுப் போனவர் அதன் பின்னர் இடைக்காலத்தில் ராதாரவி, எஸ்.எஸ். சந்திரன், கே.பாக்கியராஜ், ராமராஜன், டி.ராஜேந்தர் போன்றோர் அரசியலில் கால்வைத்து காணாமல் போனவர்கள்தான்.!


இப்போது சரத்குமார், நெப்போலியன் போன்றோர் சினிமாவில் ஜொலிப்பது போல் அரசியலில் ஜொலிக்கவில்லை. ஆனால் அரசியலில் இருக்கின்றார்கள். தற்போது விஜயகாந்த் துணிச்சலாக கட்சி தொடங்கியிருக்கின்றார். சினிமாவில் உச்சத்தில் இருந்தது போல் அரசியலிலும் உச்சத்திற்கு போவாரா...? என்பதை நாம் பொறுத்திருந்து தான் காணவேண்டும்.

**அ.கலைவாணி**


ஜெயலலிதா


கருணாநிதி


ராமதாஸ்


வைகோ




# யாரை நோவது



**இந்திய** கிரிக்கெட் அணிக்கு தற்போது சோதனைக் காலம் போல்.

இறுதிப் போட்டியில் தொடர்ந்து தோல்வி அணி வீரர்களிடையே ஒற்றுமையின்மை என நீண்டு சென்று இன்று அணித் தலைவர், பயிற்சியாளர் இடையே முரண்பாடு என்று விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இது அணிதொடரில் கருத்து வேறுபாடுகளை தோற்றுவித்துள்ள துடன் எதிர்கால திட்டமிடல்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் கொதித்தெழுந்துள்ள இந்திய முன்னாள் வீரர்கள் அணித் தலைவர் கங்குலி மீது அதிருப்தி வெளியிட்டுள்ள துடன், அவர் அணிக்கு தேவை யில்லை என்ற தொனியில் கருத்துக் களையும் வெளியிட்டுள்ளனர்.

ஒரு அணியின் பயிற்சியாளர் என்ற வகையில் அவரின் விருப்பு, வெறுப்புக்கு அப்பால் அவர் கடமையாற்றும் அணியின் வெற்றி வளர்ச்சி என்பன முக்கியமானதும், கடமைப்பாடு மிக்கதுமாகும்.

அந்த வகையில் இந்திய அணியின் புதிய பயிற்சியாளராக அண்மையில் பதவியேற்ற அவுஸ் திரேலிய நாட்டவரான கிரேக்சப்பல் பதவியேற்றது முதல் கண்டது தோல்வி முகமே. இதனால் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் தெரிவான சப்பலின் பணியில் கிரிக்கெட் வட்டாரங்களில் அதிருப்தி காணப்பட்டது.

இதற்கு இந்திய கிரிக் கெட் சபையால் கைவிடப்பட்ட இலங்கை அணியின் பயிற்சியாளராக விளங்கும் டொம்மூடியின் பயிற்சியில் அந்த அணி சிறப்பாக ஆடுவதே காரணமாக அமைந்தது.

ஆனால் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது உலகின் தலை சிறந்த துடுப்பாட்ட வரிசையை கொண்ட இந்திய அணியை வலுவான அணியாக மாற்றலாம் என்ற நம்பிக்கையில் இருந்த சப்பலுக்கு அணித் தலைவர் மூலமே தற்போது எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இது சப்பல் அணியில் யார், யார் இடம் பெற வேண்டும் என அறிவித்ததால் ஏற்பட்ட வினையே.

பயிற்சியாளர் என்பது தனியாக பயிற்சியை வழங்குபவராக மட்டும் இருக்க முடியாது. அணித்தெரிவில் அவரின் பணி மிக மிக முக்கிய மானது. இது சப்பலை பொறுத்து உச்சமானதொன்று.

ஏனெனில் உலகின் முன்னணி அணியாகத் திகழும் அவுஸ்திரேலிய அணியின் தெரிவுக் குழுவில் இடம்பெற்றவர் என்ற முறையில். இந்த நிலையில் சிம்பாப்வேக்கு சுற்றுலாவைக் மேற் கொண்டுள்ள இந்திய அணியில் சில மாற்றங்களை செய்ய பயிற்சியாளர் சப்பல் முடிவு செய்ததுடன் மோசமான நிலையில் இருக்கும் அணித்தலைவர் கங்குலியின் பணியில் அதிருப்தி கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இது இவருக்கும் இடை யில் வாய்த் தர்க்கத்தை ஏற்படுத்தியதுடன், கங்குலி நாடு திரும்பப் போவதாக அறிவிக்கும் நிலை வரை சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது அணியை பாதிக்கும் என்பதால் கங்குலி தடுத்து நிறுத்தப்பட்டதாகவும், அறியக் கிடைத்துள்ளது. இவற்றையெல்லாம் பார்க்கும் பொது அணிக்குள் தீர்க்கப்பட முடி யாத முரண்பாடு ஒன்று வலுத்து விட்டதையே உணர முடிகின்றது


ஒரு அணியின் ஒற்றுமையிலேயே அதன் பலம் தங்கியுள்ளது. எனவே காலத் துக்குக் காலம் இந்திய அணியில் ஏற்பட்டு வரும் ஒற்றுமையின்மை அவ் அணியை பாதித்த அதேவேளை தற்போது பயிற்சியாளர் வரை அது சென்றுள்ளது அவ்அணி யின் நிலையை சர்வதேசத் திற்கு வெளிக்கொணர்ந்துள் ளது.

எனவே இந்திய அணியில் ஏற்பட் டுள்ள தற்போதைய குழப்பத்திற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்கு இந்திய கிரிக்கெட் சபை தள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஊழல்கள் மலிந்து காணப்படும் இந்திய அணித் தெரிவில் அரசியல் செல்வாக்கு செலுத்தினால் சப்பல் பலிக்கடாவாக் கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. எது எவ்வாறு இருப் பினும் இருவரில் ஒருவருக்கு டாட்டா காட்டப்பட்டால் மட்டுமே இந்திய அணியின் எதிர் காலம் பிரகாசமானதாக அமையு

**இ. சியான்**

# தொடரும் வெள்ளையரின் ஆதிக்கம்



**வரும்** ஒக்ரோபர் மாதம் அவுஸ்திரேலியாவில் அற்புத மான கிரிக்கெட் தொடர் ஒன்று நடைபெறவிருக்கின்றது. அதற்கு "சுப்பர் சீறிஸ்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இப் போட்டி உலகில் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் தரவரிசையில் தொடர்ந்து முதலாவது இடத் தைப் பிடித்துள்ள அவுஸ் திரேலிய அணிக்கும் உலகின் ஏனைய அணி களிலிருந்து தெரிவு செய் யப்பட்ட வீரர்களின் (உலக அணி) அணிக்கு மிடையிலான மூன்று ஒரு நாள் போட்டிகளையும் ஆறு நாட்களைக் கொண்ட ஒரு டெஸ்ட் போட்டியையும் கொண்ட தொடராகும்.

இதுவரை இவ்வாறு இரு அணி களுக்கு மிடையில் போட்டிகள் நடைபெற்ற போதும் அவை உத்தியோக பூர்வ போட்டிகளாக பிர கடனப்படுத்திவிடவில்லை.எனினும் இத் தொடரை சர்வதேச கிரிக்கெட் சபை உத்தி யோகபூர்வ போட்டிகளாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதற்கான உலக அணியைத் தெரிவு செய்ய முன்னாள் பிரபல வீரர்களைக்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இதன் தலைவராக இந்திய அணியின் முன்னாள் வீரர் கவாஸ்கர் பணியாற்றுகின்றார். இந்தக் குழுவினர் உலக அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்து விட்டனர். டெஸ்ட் அணியின் தலைவராக தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரஹம் ஸ்மித்தும் ஒரு நாள் தொடருக்கான அணித் தலைவராக அதே நாட்டைச் சேர்ந்த ஷோன் பொலக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



சிலவேளை அவுஸ்திரேலியாவை விட உலகில் சிறந்த அணி என்ற வகையில் தென்னாபிரிக்க வீரர்களை அணித் தலைவர்களாக நியமித்திருக்கலாம்.

எனினும் இந்தத் தேர்வு முறையில் தவறு இருப்பதையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அதாவது உலகில் தற்போதைய கிரிக்கெட்டில் இருக்கும் சிறிலங்காவைச் சேர்ந்த சிரேஷ்ட துடுப்பாட்ட வீரரான சனத்ஜயசூரியா, பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் ஆகியோரில் ஒருவரையாவது உலக அணியில் இணைத்துக் கொள்ளாமையை குறிப்பிட்டே ஆக வேண்டும்.

இதனை நோக்கும் போது இது அவுஸ்திரேலியா அணிக்கு வெற்றி வாய்ப்பை வழங்க எடுக்கப்பட்ட முடிவு எனக்கூடக் கருத முடிகிறது. எனினும் தற்போது சச்சின் டெண்டுல்கர் பங்கு பற்ற முடியாதிருப்பதால் இன்சமாம் உல் ஹக்கிற்கு வாய்ப்பளிக்கப்படலாம் என புதிய தகவல் கிடைத்துள்ளது.

ஆனால் கடந்த வருடமே சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகி 18 ஒரு நாள் போட்டிகளில் மட்டும் பங்கேற்றுள்ள இங் கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சனுக்கு வாய்ப்பளித்துள்ளமை "வழக்கும் வெல்ல வேண்டும் இழப்பையும் பெற வேண்டும்" என்ற வெள்ளையர்களின் போக்கையே இந்த ஓரங்கட்டுதல் எடுத்துக் கூறுகின்றது. அதனால் அவுஸ்திரேலியா- இங் கிலாந்து நாட்டவர்களின் அதிகாரத்திற்கு சர்வதேச கிரிக்கெட் சபை ஒத்துழைப்பு வழங்குவ தாகவும் கருத வேண்டி யுள்ளது.



இந் நிலையில் பிரபல வீரர்கள் இல்லாத நிலை யில் உலக அணி எவ் வாறு அவுஸ்திரேலிய அணியை சமாளிக்கப் போகின்றது என்ற கருத்தும் ரசிகர்களிடம் தோன்றலாம்.

எனினும் இங்கிலாந்து அணியிடம் ஆஷஸ் கிண்ணத்தைப் பறி கொடுத்த அவுஸ்திரேலியா இதன் மூலம் தனது கறையைப் போக்கிக் கொள்ளவும் கங்கணம் கட்டியிருக்கும் என்றால் மிகையாகாது. □

**வாழிவேல்**

# விளையாட்டுத் தந்த மகத்துவம்

சர்ஜி புபிகா கடந்த காலங்களில் உயரம் பாய்தலில் விண்ணை முட்டும் வீரர் என்று புகழப்பட்டவராவார். 15 வருடங்களாக தடியூன்றிப் பாய்தல் போட்டியில் பிரகாசித்து வந்த அவர் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் பல சாதனைகளைப்படைத்துள்ளார். இதுவரை அவரின் சாதனையை சமப்படுத்த யாரும் தோன்றவில்லை.

இவ்வாறு இவர் பற்றி கூறுவதற்குக் காரணம் அண்மையில் அவருக்கு விளையாட்டுத் துறையில் உயர்ந்த பதவி ஒன்று கிடைத்தமையாகும். இவருக்கு உக்ரேய்ன் நாட்டில் தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் பதவி கிடைத்துள்ளது. வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட இவருக்கு 110 வாக்குகளும் இவரை எதிர்த்துப் போட்டியிட்ட அந் நாட்டின் முன்னாள் பிரதமருக்கு 80 வாக்குகளும் கிடைத்தன.

அந்த வகையில் நிரந்தரமற்ற அரசியலை வென்று விளையாட்டின் மகத்துவத்தை இவர் எடுத்துக் காட்டியுள்ளார். அதனால் அந் நாட்டு சனாதிபதி தனது பூரண ஆதரவைத் தெரிவித்திருப்பதுடன் விளையாட்டு வீரர் ஒருவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்துள்ளார்.

அதன் பின் அவர் உக்ரேய்னை சர்வதேச விளையாட்டுக்களில் ஏனைய நாடுகளின் தரத்திற்கு இட்டுச் செல்வதே



தமது பணி என தெரிவித்துள்ளார்.

இவர் தனது காலத்தில் 2000 ஆம் ஆண்டு கோலூன்றிப் பாய்தலில் ஆறு மீற்றரைக் கடந்தார்.

இவர் உக்ரேய்னின் ஒலிம்பிக் குழுத் தலைவர் பதவி மட்டுமன்றி சர்வதேச ஒலிம்பிக் குழு அங்கத்தவராகவும், சர்வதேச மெய் வல்லுனர் சங்க ஆணையாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவரைப் போன்றே இன்னும் ஒருவீரரான செபஸ்தியன் கோ விளங்குகின்றார். 1980 , 1984 ஆம் ஆண்டுகளில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் இவர் 1500 மீற்றர் ஓட்டப் பந்தயங்களிலும் அதற்கு முன்பு 800 மீற்றர் பந்தயத்திலும், வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார். இவரின் முயற்சி காரணமாகவே 2012ஆம் ஆண்டு லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் நடத்த அனுமதி கிடைத்தாக கூறப்படுகின்றது.

அடுத்தாக அதிகாரிகளாக நியமனம் பெற்ற மேலும் இரு வீரர்கள் காணப்படுகின்றனர். அவர்களில் ஒருவர் ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல கால் பந்தாட்ட வீரரான மிக்கேல் பிளட்டிணியும், பிரான்சை சேர்ந்த பர்கென்பாவுமாகும். பர்கென்பாவா வரும் 2006ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளின் அமைப்பாளர் என்ற கௌரவத்தைப் பெறுகிறார். பிளட்டிணி நடைபெறவுள்ள ஐரோப்பிய கால்பந்து சம்மேளனத்தின் அடுத்த தலைவருக்காகப் போட்டியிடவுள்ளார்.

# ஜப்பான், மலேசியா உள்ளிட்ட நாடுகள் இலங்கையரை திருப்பியனுப்ப நடவடிக்கை

(கொழும்பு)

ஜப்பான், மலேசியா ஆகிய நாடுகள் இலங்கையரைத் திருப்பி அனுப்புகின்றன

இலங்கையிலிருந்து சில ஆசிய நாடு களிற்குச் செல்லும் இலங்கையா களை அந்த நாடுகளின் வானூர்தித் தளங் களில் வைத்தே இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு அந்த நாடு களின் அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக் கப்படுகின்றது.

இந்தோனேசியா, ஜப்பான், மலேசியா போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களே அவ்வாறு திருப்பி அனுப் பப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகின் றது.

இலங்கையர் மீது நம்பிக்கை இழந்த நிலையிலேயே இவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலை யில் சட்டரீதியாக அவ்வாறான நாடு களுக்குச் செல்லும் இலங்கையர் களையும் இவ்வாறு வானூர்தித் தளங்களில் வைத்தே திருப்பி அனுப் புவதற்கு மேற்படிநாடுகள் முயன்று வருவதாகவும் தெரிவிக்கப் படுகின் றது.

கடந்த மூன்று மாதங்களாக அவ் வாறு சட்டரீதியாக சென்ற 200க்கும் அதிகமான இலங்கையர்கள் குறிப் பிட்ட நாடுகளின் வானூர்தித் தளத் தில் வைத்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். ஜப்பான் நாட்டுக்குச் சென்றவர்களே இவர் களில் அதிகமாகத் திருப்பி அனுப்பப் பட்டவர்கள் என்றும் பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தித் தளத்தின் குற் றப் புலனாய்வுத் திணைக்கள கிளை யின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# எதிரணியின் பிரச்சாரங்களை பிரதமர் மகிந்த நிராகரிப்பு

சனாதிபதி சந்திரிகா நியூயோர்க்கிலிருந்து வந்ததும் பாராளு மன்றைக் கலைத்துவிடுவார் என்றும் பல அரசாங்க அமைச்சர்கள் ஐ.தே.கட்சியில் இணைந்துவிட்டார்கள் என்றும் வெளியான தகவல்களை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார். சந்திரிகா அவ்வாறு பாராளுமன்றைக் கலைக்கமாட்டார் என்று உறுதியாகத் தெரிவிக்கும் ராஜபக்ஷ, தான் சனாதிபதியாக வந்தாலும் பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார். கண்டியில் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டத்தில் அவர் தொழிலாளர் சங்கத்தினரிடையே உரை யாற்றினார். அப்போது பாராளுமன்றம் கலைக்கப்படவேண்டிய அவசியம் கிடையாது என்றதுடன் பாராளுமன்றத்தில் தனக்கு ...வாக பெரும் பான்மை உறுப்பினர்கள் இருப்பதாகவும் தெரிவித்...ளார். அவர்மேலும் தெரிவிக்கையில்; பல அமைச்சர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான தமது ஆதரவாளர் ஐ.தே.கட்சியில் இணைந்துள்ளதாக அக்கட்சி தெரிவிப்பதில் எவ்வித உண்மையும் கிடையாது என்றும் இவை அனைத்தும் ஐ.தே.கட்சியின் வதந்தி என்றும் இந்த வதந்திகள் அவர்களின் வெற்றிக்கு உதவிசெய்யாது என்றும் தெரிவித்துள்ளார்.

# மகிந்தவை ஆதரித்து ஹெல உறுமய 1000 பிரச்சாரக் கூட்டங்கள்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக 1000 கூட்டங்களை நடத்த ஜாதிக ஹெல உறுமயவினர் தீர்மானித்துள்ளனர். இந்தக் கூட்டங்கள் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள முக்கிய பௌத்த விகாரைகளிலேயே நடைபெறவுள்ளன.

சனாதிபதித் தேர்தல் திகதி தொடர்பான அறிவித்தல் வெளியிடப் பட்டவுடன் இந்தக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய வின் பேச்சாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார். (32)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

*வழ. இல: -187/2005,*
*தன்மை: - மணவிலக்கு,*

*வழக்காளி,*
*சோலையன் சத்தியதேவன்,*
*இல. 244,*
*மாயவனூர்,*
*வட்டக்கச்சி.*

*எதிராளி,*
*சத்தியதேவன் சுசீலா,*
*பள்ளத்தோட்டம்,*
*3ஆம்கட்டை,*
*திருகோணமலை).*

## பகிரங்க அறிவித்தல்

மேற்படி வழக்கின் எதிராளியான சத்திய தேவன் சுசீலா என்பவருக்கு அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்க முயன்றும் சேர்ப்பிக்க முடியாதவாறு எதிராளி செயற்பட்டு ...வதால் இப்பகிரங்க அறிவித்தல் பிரசுரிக் கப்படுகிறது. இப்பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் எதிராளியோ அல்லது எதிராளி சார்பில் உரித்துடைய எவருமோ மன்றில் தோன்றி தமது ஆட்சேபனையை தெரிவிக்கத்தவறும் பட்சத்தில் இவ்வழக்கு ஒரு முகவிளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

"மன்றின் கட்டளைப்படி"

வரைபு:-
T.S.வேலவர்,
வழக்காளி சட்டத்தரணி,
வேள்ட்விசன் ஒழுங்கை,
நீதிமன்று முன்பாக,
கிளிநொச்சி. (6720)

*செ.மாணிக்கராசா,*
*பதிவாளர்*
*தமிழீழ மாவட்ட நீதிமன்று,*
*கிளிநொச்சி,*

நிகொட் - முல்லைத்தீவு

வடக்கு கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

## உதவித்திட்டமிடல் பணிப்பாளர் II/I பதவிக்கான விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இயங்கிவரும் நிகொட் கருத்திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் II/I பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு 2005.10.03 ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிகொட் மாவட்ட முகாமைத்துவப் பிரிவு அலுவலகத்தில் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் II/I பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

### தகைமைகளும் அனுபவங்களும்:-

- *அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் முதலாந்தர சித்தி அல்லது இரண்டாம் தரச்சித்தி பட்டதாரியாக இருத்தல்வேண்டும். அல்லது,*
- *அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் பின்படிப்பு பட்டதாரி யாக இருத்தல் வேண்டும் அல்லது,*
- *அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் பின்படிப்பு பட்டதாரி டிப்ளோமாவை உடையவராக இருத்தல் வேண்டும்.*

### தொழிற்தகைமைகள்:-

கணனியில் MS Office இல் சிறந்த அறிவுடன் Internet E-mail ஆகியனவற்றில் அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும் அத்துடன் ஆங்கிலத்தில் உரையாடவும் எழுதவும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

சிறந்த தொடர்பாடல் திறமை கொண்டவராக இருத்தல்வேண்டும்.

### கடமைகள்:-

சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டங்களையும், உபகருத்திட்டங்களையும் திட்டமிடுதலிலும் செயற்படுத்தலிலும் மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளருக்கு உதவி செய்யவேண்டும். உபகருத்திட்டங்களை செவ்வனே செயற்படுத்துவதற்குத் தேவையான தகவல்களை திரட்டுதல், முன்னேற்ற அறிக்கை தயாரித்தல், அத்தோடு கருத்திட்டயோசனைகள் தயாரித்தல் ஆகியவற்றில் மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளருக்கு உதவிசெய்ய வேண்டும்

### சம்பளம்:-

இத்தகைய பதவிகளுக்கு அரசாங்க சேவையில் வழங்கப்படும் சம்பளத்துடன் தெரிவு செய்யப்படுபவரின் தகைமை, அனுபவம் மற்றும் வேலைகளையும் கவனத்தில் கொண்டு சம்பளத்தின் 50%இற்கு மேற்படாத தொகை வழங்கப்படும்.

திருமதி.இமெல்டா சுகுமார்,
அரச அதிபர், முல்லைத்தீவு.

(சி-12830)

# தனியார் பேருந்து, ஓட்டுநர், நடத்துநர் பார்வைக்கு
# தமிழீழப் போக்குவரவுக்கழகம்

25.09.2005 ஆம் நாள் ஞாயிறு மாலை 7.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் முக்கிய கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்,
புதுக்குடியிருப்பு.

(சி.12835)

## தீவிரவாதம் குறித்து முதலமைச்சர்கள் மாநாடு

(புதுடில்லி)

தீவிரவாத பிரச்சினைகள் குறித்து விவாதிக்க முதலமைச்சர்கள் மாநாடு டில்லியில் நேற்று நடைபெற்றது. தீவிரவாதிகளை ஒடுக்க புதிய செயற்திட்டமொன்றை வகுப்பது பற்றி இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. குறிப்பாக தீவிரவாத பிரச்சினைகளினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள முதலமைச்சர்களுடன் புதிய திட்டம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

## பா.ஜ.க.உள்விவகாரங்களில் ஆர்.எஸ்.எஸ். தலையீடு

(புதுடில்லி)

பா.ஜ.க.தலைவர் பதவியிலிருந்து வரும் டிசம்பர் மாதம் விலகப்போவதாக அத்வானி அறிவித்திருப்பது அக்கட்சியின் உள்விவகாரங்களில் ஆர்.எஸ்.எஸ். தலையிடுகிறது என்பதை உறுதிப்படுத்துவதாக காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

காங்கிரஸ் செய்தித்தொடர்பாளர் இதுபற்றி செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்; பா.ஜ.கவில் மணிக்கொரு தடவை நிகழ்ச்சிகள் மாறிக்கொண்டிருக்கின்றன.

மும்பையில் சமீபத்தில் நடைபெற்ற பா.ஜ.க.கூட்டத்தில் அத்வானி தாம் பதவி விலகப்போவதாக அறிவித்தார். ஆனால் அறிவித்தபடி அவர் பதவியிலிருந்து விலக வில்லை.

அத்வானி எடுக்கும் முடிவுகளில் ஆர். எஸ்.எஸ் தலையிடுகிறது என்பது இதன் மூலம் தெளிவாகின்றது என்றும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சென்னையில் நிறைவுற்ற பா.ஜ.க.வின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் பேசிய அத்வானி, பா.ஜ.க. தலைவர் பதவியை வரும் டிசம்பர் 30ஆம் திகதி தாம் இராஜினாமா செய்யப்போவதாக அறிவித்ததை கட்சியின் மூத்த தலைவர் ஜஸ்வந்சிங் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# CARITAS - HUDEC JAFFNA

# VACANCY

### 1.Livelihood Manager

**Base station:** jaffna & Vettilaikerny

**Responsibilities:**

The post holder reports directly to the overall Livelihood Advisor (Expatriate).the post holder will undertake the following activities.

- Direct,supervise and manage project officers,project managers and animators /social workers in identifying projects through a participatory process which are inclusive of a diverse group of individuals,including vulnerable groups.
- Ensure a high level of program quality in livelihood project design,implementation,monitoring and evaluating.
- Identify capatity building needs of team's project officers project managers and animators/social workers and local partners.
- Organize trainings and workshops to build and improve capacities of the above mentioned staff.
- Prepare accurate and timely reports to donors.
- share experiences,methodologies and lessons learned with CI Livelihood partner in other Diocese of sri Lanka.
- Represent caritas-Hudec on the issue of livelihoods and income generating activities at district and divisional level coordination meetings with government,NGOs,UN organisations and the private sector.
- Work with project officers to regularly monitor and evaluate livelihood programs (fisheries,agriculture,small enterprises)

**skills and competencies:**

**Essential**

- Demonstrated manage experience with a special emphasis on project management related to micro-en-terprise and income generating activities.
- Experience using word processors , spreadsheets and e-mail.
- Knowledge and experience working with participatory methods.
- Demonstrated knowledge in agriculture, fisheries and small enterprises sectors.
- Fluency in Tamil and English.
- Good communication skills.

(சி-12865)

### 2.Livelihood officer

**Base Station: Jaffna & vettilaikerny.**

**Responsibilities:**

The post holder reports directly to the Livelihood Manager. The post holder will undertake the following activities.

- Ensure a high level of program quality in livbelihood project design, implementation, monitoring and evaluation.
- Organize trainging & workshops to build & improve capacivities of the above mentioned staff,
- Represent Caritas-Hudec on the issue of livelihood & income generating activities at district & divisional level coordination meetings with government, NGOs, UN organizations & the private sector.
- Professionalism, Intergrity, Interpersonal skills, goal focus
- Work with project officers to regularly monitor & evaluate livelihood programs (fisheries, agriculture, small enterprises)

**Skills and Competencies:**

**Essential**

- Demonstrate management experience with a special emphasis on project management related to micro-enterprise and income generating activities.
- Experience using word processors, spread sheets & email.
- Knowledge & experince working with participatory.
- Demonstrated knowledge in agriculture, fisheries & small enterprises sector.
- Fluency in Tamil & English.
- Good communication skills.


Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, Please send us your CV & motivation letter including your contacts & minimal two references to the following address, latest by 23 August 2005

Father Jeyakumar
Caritas-Hudec Jaffna
14 Mathew's Road, Deogu Street,
Jaffna.

Or e-mail: hudec@sltnet.lk

PLEAE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS



**- நட்புறவு கடினப்பந்து கிரிக்கெட் போட்டி -**

# கிளிநொச்சி ம.வி., யாழ்ப்பாண கல்லூரி அணிகளுக்கிடையிலான போட்டி சமநிலையில்





கிளிநொச்சி பொதுவிளையாட்டரங்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கும், கிளிநொச்சி மகாவித்தியாலய அணிக்கும் நேற்று நடைபெற்ற 13 வயதிற்குட்பட்டோருக்கான இனிங்ஸ்போட்டியில் தமது அபாரத்திறமையை கிளி.மகாவித்தியாலயம் வெளிப்படுத்திய போதும் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிளி. மகா வித்தியாலய அணி 53 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. நிரோசன், ரஞ்சிவ், சஞ்சீவன் ஜனகன் முறையே 32,27,17,10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜிதன் நான்கு விக்கெட்டுக்களையும், சிறிகுகன் மூன்று விக்கெட்டுக்களையும், டிலக்ஷன் இரண்டு விக்கெட்டுக்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் 15.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

இதில் டிலக்ஷன் 11ஓட்டங்களைப் பெற்றார் றஞ்சீவ் நான்கு விக்கெட்டுக்களையும், கிரிசாந்த் மூன்று விக்கெட்டுக்களையும், ஜனகன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பொலோ ஒன்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் 39 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றனர். லவன் ஆட்டமிழக்காமல் 36 ஓட் டங்களைப் பெற்றார். கிரிசாந்த் நான்கு விக்கெட்டுக்களையும் வினேஸ்ராஜ் றஞ்சீவ் தலா ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதேவேளை மேற்படி இரு அணிகளுக்கும் இடையிலான 30 ஓவர்கொண்ட ஒருநாள் போட்டி இன்று கிளி. மத்திய மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளி- சுகாதார திணைக்கள அணியை நீர்ப்பாசனத்திணைக்கள அணி வீழ்த்தியது

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அரச - அரசசார்பற்ற நிறுவனங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் 15 ஓவர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற போட்டியில் நீர்ப்பாசனத்திணைக்களம் அணி வெற்றி பெற்றுள்ளது

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பாடிய கிளிநொச்சி சுகாதார திணைக்கள அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 76 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பிறேம்குமார் 21 ஓட்டங்களையும், மகேந்திரன் 19 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் உதயசீலன், சஞ்சேயன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், விக்கி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

77 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய நீர்ப்பாசனத் திணைக்கள அணி 13.4 ஓவர் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் குருபலராஜன் 20 ஓட்டங்களையும், தினேஸ் 19 ஓட்டங்களை ஆட்டமிழக்காதும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஜெனிகாந், பிறேம்குமார் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், தர்மகுலசிங்கம் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டிக்கு நடுவர்களாக றெஜி, சுபானந் ஆகியோர் கடமையாற்றினர்.

இன்று நடைபெறும் போட்டியில் கட்டடத்திணைக்கள அணியை எதிர்த்து கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலக அணி மோதவுள்ளது.



# மாவட்ட ரீதியான கரப்பந்துப் போட்டி அரியாலை ஐக்கிய வி.கழகம் சம்பியன்

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியாக நடத்திவந்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் எதிர்த்து விளையாடிய காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 3:0 என்ற நேர் சுற்றுக்களில் (25:16, 25:11, 25:23) இலகுவாக வெற்றிபெற்றது.

இதேவேளை மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடி யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு அணியை3:1என்றசுற்றுக்கள் கணக்கில்(25:18, 25:10, 18:25, 25:12)வெற்றி பெற்றது.

இறுதியாட்டத்தின் ஆட்டநாயகனாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர் எஸ்.பாஸ்கரன் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வாட்டங்களுக்கு மத்தியஸ்தர்களாக சிறிமுருகதாஸ் கந்தன், அப்புத்துரை ஆகியோர் கடமையாற்றினர்.இவ் இறுதிப்போட்டியில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கலந்து கொண்டுவெற்றிபெற்றவர்களுக்குப் பரிசு வழங்கிக் கௌரவித்தார். (கீ)

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சபை நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக ஞா. செல்வரட்ணமும், செயலாளராக இ. பரஞ்சோதியும், பொருளாளராக அ. றெஜி அலோசியசும், உப தலைவராக ப. ஆனந்தராசாவும், உப செயலாளராக பா. ஸ்ரீல்குமாரும், நிர்வாக உறுப்பினர்களாக நந்தகுமார், பூ. சுடானந், இ.சிவலிங்கம், ச. பெனடோர், றியாஸ், திருமதி ப. ஆறுமுகம், திருமூர்த்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போசகர்களாக கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் சிவமணியும், மாவட்ட விளையாட்டு அதிகாரி கனகராசாவும், காப்பாளராக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# யாழ்.குடாநாட்டில் மீண்டும் கடல்சார் போட்டிகள் ஆரம்பம்

கடந்த கால போர் அனர்த்தங்களினால் ஓய்ந்திருந்த கடல் சார் விளையாட்டுப்போட்டிகள் மீண்டும் குடாநாட்டினில் தற்போது புத்துணர்ச்சியுடன் எழுச்சிபெற்று வருகின்றது. இதன் ஓர் அங்கமாக கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் பெரும் அழிவைச் சந்தித்த வல்வெட்டித்துறைப் பகுதியில் மீண்டும் கடல் சார் விளையாட்டுக்கள் நடாத்தப்படுகின்றது.

வடமராட்சியின் பிரபல விளையாட்டுக் கழகங்களில் ஒன்றான வல்வை உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின் 43 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சனி மற்றும் ஞாயிறு தினங்களில் கடல் சார்ந்த விளையாட்டுநிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றது.

படகோட்டப்போட்டிகள் மற்றும் நீச்சல் போட்டிகளென பல பிரிவுகளாக இப்போட்டிகள் இடம்பெற்றிருந்தது.

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் இடம்பெற்ற இப்போட்டி நிகழ்வுகளைக் கண்காணிக்க குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதனிடையே இப்போட்டிகளை இலங்கை விமானப்படையின் உலங்கு வானூர்திகள் தொடர்ச்சியாக ரோந்தில் ஈடுபட்டு கவனித்துக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் குருநகர் குடாக்கடல் பரப்பிலும் இவ்வாறான கடல் சார் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## நூறாவது போட்டியில் ஜெயசூர்யா

சிறிலங்கா கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் சிறந்த துடுப்பாட்ட வீரருமான சனத் ஜெயசூரியா தனது நூறாவது டெஸ்ட் போட்டியை சந்திக்கவுள்ளார்.

அதன்படி இன்று கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் ஆரம்பமாகும் பங்களாதேஷ் அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டி ஜெயசூரியாவின் நூறாவது டெஸ்ட் போட்டியாகும். 1995 ஆம் ஆண்டு சிறிலங்கா அணியில் நிரந்தரமாக இணைந்த இவர் 1991 ஆம் ஆண்டு ஹமில்டனில் நடைபெற்ற போட்டியில் அறிமுகமானார்.

இதுபற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில்; அணியில் பின் வரிசை வீரராக அறிமுகமாகி நூறாவது போட்டியை பூர்த்தி செய்வேன் எனக் கனவில் கூட நினைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் காலம் வேகமாக நகர்ந்துள்ளதாகவும் தான் இவ்வளவு தூரம் வளர்ச்சி நோக்கி பயணித்திருப்பதை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது என்றும் தெரிவித்த அவர் இந்த கடுமையான உழைப்பின் மூலம் முன்னேற்றம் கண்டமை மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்துள்ளார்.

இவர் சர்வதேச ரீதியில் நூறாவது டெஸ்ட் போட்டியை நிறைவு செய்த ...ஆவது வீரராவார். முதல் வீரர் முன்னாள் ...ங்கிலாந்து அணித்தலைவர் கொலின் ...ௗட்றி என்பது குறிப்பிடத்தக்கது.

# 30 பேர் கொண்ட மேற்கிந்தியத்தீவு அணி தெரிவு



வரும் ஒக்ரோபரில் நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய அணியுடனான போட்டித்தொடரை கருத்தில் கொண்டு மேற்கிந்திய தீவு கிரிக்கெட்சபை 30 பேர் கொண்ட அணியொன்றை ஒழுங்கு செய்துள்ளது.

கடந்த சிறிலங்கா சுற்றுப் பயணத்தை பகிஷ்கரித்த பிரையன் லாறா, கிறிஸ் கெய்ல்ஸ், ராம் நரேஷ் சர்வான் ஆகியோரும் இவ்வணியில் இணைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் சுற்றுலாவுக்கான இறுதி 14 பேர் கொண்ட அணி விரைவில் தெரிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் லாறா,கெய்ல்ஸ் சர்வான் உள்ளிட்ட ஏழுபேருடன் ஆதரவு வழங்கும் ஒப்பந்தம் செய்வது தொடர்பில் தற்போதைய பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவர்களின் பதிவின் அடிப்படையிலேயே இவ்வணியில் இணைக்கப்படுவார்களா இல்லையா என்பது தங்கியிருப்பதாகவும் இதற்கான நடவடிக்கையை புதிய சபைத்தலைவர் கென்கோர்டன் தலைமையிலான குழு எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இவ்வருட இறுதிக்குள் பத்து வீரர்களை இணைத்து ஒப்பந்தம் செய்யவுள்ளதாக கோர்டன் தெரிவித்துள்ளார். இந்த அணிக்கான பயிற்சி முகாம் இம்மாதம் 24ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை பார்படோசில் நடைபெற விருப்பதாகவும் முதலாவது டெஸ்ட் போட்டி வரும் ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாக விருக்கின்றது.




# இந்திய அணியின் மாற்றம் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்படும்





இந்திய கிரிக்கெட் அணியின் சிம்பாப்வே சுற்றுப் பயணம் முடிந்த பிறகே அணியில் மாற்றங்கள் செய்வது குறித்து விவாதித்து முடிவு எடுக்கப்படும் என்று இந்தியக் கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

தலைவர் பதவியிலிருந்து விலகவேண்டும் எனத் தான் வற்புறுத்தப்பட்டதாக சௌரவகங்குலி அண்மையில் கூறியிருந்தார். அணியில் பயிற்சியாளர் சப்பல் கங்குலியை நிர்ப்பந்தித்ததாகக்கூறப்படுகின்றது. இதுபற்றி தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டியளித்துள்ள கிரிக்கெட்வாரியத்தலைவர், சண்பீட்ஸ்சிங்மகேந்திரா கங்குலி, சப்பல் இடையே ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் மோதலால் அணியில் நெருக்கடி எதுவும் இல்லை என்றார். எனினும் சிம்பாப்வே சுற்றுப்பயணம் முடிந்தவுடன் அனைத்து விவகாரங்கள் குறித்தும் விவாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



## சிந்தனைக்கு

மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்ளும்போதுதான் மக்கள் எம்முடன் இணைந்து கொள்வார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 20.09.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com


## நிதானமான தீர்மானம்!

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையை வைத்து சர்வதேச ரீதியில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட முக்கியமானதொரு இராஜதந்திரநகர்வு தோல்வியடைந்துள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய யூனியன் தடை செய்யவேண்டும் என்பதே தோல்வியடைந்த இராஜதந்திர நகர்வாகும்.

லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்கு யார் காரணம்? என்பதை நிருபணம் செய்ய எந்த ஆதாரமும் அற்ற நிலையிலும்கூட, விடுதலைப்புலிகளே காரணம் என பலமான குற்றச்சாட்டை முன் வைத்து விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எதிராக இராஜதந்திர மட்டத்தில் தீவிர பிரச்சார நடவடிக்கையில் சிறிலங்கா அரசாங்கம் இறங்கியது. இப்பிரச்சார நடவடிக்கையின் முக்கிய இலக்கு ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடை செய்யக் கோருவதே ஆகும்.

இத்தனைக்கும் கதிர்காமர் சிறிலங்கா ஆட்சியாளர்கள் மனங்களில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் மறைந்து விட்டார் என்பதே உண்மையாகும். கதிர்காமரின் மரணத்தைக் கொண்டு அரசியல் நடத்த விளைந்த சிங்கள ஆட்சியாளர்கள்– கதிர்காமர் மறைந்து ஒருமாத முடிவில் அவருக்காக ஒரு நினைவுக் கட்டுரையைத்தானும் ஊடகங்களில் எழுதத்தயாராக இல்லாத ஒருநிலை உள்ளது என்பதே உண்மையாகும்.

ஆனால் அதில் தவறு இருப்பதாகவும் இல்லை. கூலிப் படையாக, தமது சுகபோகத்திற்காக மட்டும் செயற்பட்டவர்களுக்காகச் செயற்பட்டவரை எப்பொழுதும் நிறைவு கூர்ந்து வருவார்கள் என எவ்வாறு கூறிவிட முடியும்? கதிர்காமரின் சடலத்தை வைத்து அரசியல் நடத்தும் வரையில் அரசியல் நடத்தி விட்டு எறிந்துவிடுதலே எதிர்பார்க்கத்தக்கதாகும். இத்தகைய தொன்றே கதிர்காமருக்கும் நடந்துள்ளது.

இது ஒருபுறம் இருக்க, ஐரோப்பிய யூனியன் நாடுகளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வதற்கு சிறிலங்கா அரசு நீண்டகாலமாக தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை வெளிப்படையானது. குறிப்பாக லக்ஷ்மன் கதிர்காமரின் முக்கிய குறிக்கோளாக ஐரோப்பிய யூனியன் நாடுகளில் புலிகளை தடை செய்வதே இருந்தது. இதற்கெனக் கதிர்காமர் நீண்டதான இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டுமிருந்தார்.

இந்நிலையில் கதிர்காமரின் கொலையுடன் விடுதலைப் புலிகளைத்தடைசெய்வதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன. ஐரோப்பிய தற்போதைய தலைமைத்துவ நாடு பிரிட்டன். விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யுள்ள நிலையிலும், பிரச்சாரத் திற்கு வாய்ப்பானதொரு சூழ் நிலைகாணப்பட்ட நிலையிலும் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் இவ்விடயத்தை மிகவும் இராஜதந்திர ரீதியிலும் நிதானமாகவும் கையாண்டுள்ளன என்றே கொள்ளவேண்டும். அதாவது இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடாதவிதத்திலும், ஒருதலைப்பட்சமான முடிவுகள் எடுக்காமலும் செயற்பட்டுள்ளன என்றே கூறமுடியும்.


சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகள் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டு நிருபணம் ஆனது அல்ல என்பது ஒரு புறம் இருக்க– சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காணப்படாமல் போனமைக்கு சிறிலங்கா அரசாங்கமே முக்கிய காரணம் என்பதை அவை புரிந்து கொண்டுள்ளதாகவே உணரமுடிகின்றது. அதாவது, கதிர்காமரின் கொலைக்கு சமாதான முயற்சிகள் முடக்கப்பட்டமையும், சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகள் மீது தொடுத்திருந்த மறைமுகப் போரும் காரணம் என்பதை அவை புரிந்து கொண்டிருப்பதாகவே எண்ண வேண்டியதாகவுள்ளது.

அது மட்டுமன்றி விடுதலைப்புலிகள் இயக்கம் மீது விதிக்கப்படும் தடையானது எதிர்காலச் சமாதான நடவடிக்கைக்கு பெரும் முட்டுக் கட்டையை ஏற்படுத்தும் என்பதையும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் புரிந்து கொண்டிருப்பதும் முக்கியமானதாகும். அதிலும் குறிப்பாக சிறிலங்கா அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வே அரசு வகிக்கும் பாத்திரமும் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடும்.

இதனைத் தவிர சர்வதேச மத்தியஸ்துவத்தை குறிப்பாக மேற்குலக நாடுகளின் மத்தியஸ்துவ பாத்திரத்தை ஓரம் தள்ளிவிட சிறிலங்கா ஆட்சிகளில் ஒரு தரப்பினர் முற்பட்டு நிற்கையில் ஐரோப்பிய யூனியனில் விதிக்கப்படும் தடையானது தமிழர் தரப்பை ஓரம் தள்ளுவதாகி விடும் என்பதையும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் புரிந்து கொண்டிருக்கலாம்.

இந் நிலையிலேயே சிறிலங்கா அரசு ஐரோப்பிய யூனியனில் விடுதலைப்புலிகளைத் தடை செய்ய மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்காமல் போயுள்ளது. சிறிலங்கா அரசு எப்பொழுது தனது நியாயப்பாட்டுக்குச் சர்வதேசம் அதரவு அளிக்க வேண்டும் எனக் கருதி வந்துள்ளதே ஒழிய சர்வதேசத்தின் கருத்துக்களை எப்பொழுதும் செவி மடுத்ததாக இல்லை. இதனைச் சர்வதேச சமூகம் ஓரளவேனும் புரிந்து கொண்டுள்ளதையே ஐரோப்பிய யூனியனின் தற்போதைய தீர்மானம் வெளிக்காட்டி நிற்குமெனின் மிகையாகது.

# நிச்சயம் ஈழம் மலரும்



தேரோடும் வீதியிலே எம் அண்ணன்
ஈராறு நாட்களாய் பசி கிடந்தான்
வீரம் விளை எம் ஈழம் வீரிட்டு
கதறியதே எம் வேங்கையின் கோலம் கண்டு.

மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும் என்று
வைத்தான் கோரிக்கை தனை
அமர்ந்தானே மேடைதனிலே

அண்ணனவன் கோலம் கண்டு கதறினரே எம்மக்கள்
வேண்டாம் திலீபா விட்டுவிடு என்று கெஞ்சியழுதனரே
தடுக்காதீர் என்னை என தவம் கிடந்தான் எம் அண்ணன்
ஈழமே என் பேச்சு. இல்லையேல் வேண்டாம் என் மூச்சு
விடாத கொள்கையுடன் வீரனவன் நோன்பிருந்தான்.

அகிம்சையின் நாடே ஏன் அறியாதிருந்தாய் அகிம்சையின் தீரத்தை
காந்தியின் நாடென்று பசப்பும் பாரதமே
பார்த்தீபனின் விரதத்தை ஏன் பாராமுகமாய் இருந்தாய்
நீ புரிந்த கோரத்தால் எம் அண்ணனை இழந்தோமே.

அண்ணன் திலீபனே
நிச்சயம் எம் ஈழம் மலரும்
நாயகனே உம் கனவு நனவாகும்
நம்பி உறங்கண்ணா.

உ.ஜெயந்தினி

# வவுனியாவில் மாபெரும் தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டிற்கு ஏற்பாடு

(வவுனியா செய்தியாளர்)

கடந்த யூலை மாதம் 27 ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற தமிழ்தேசிய எழுச்சி மாநாட்டிற்கு வலுச்சேர்க்கும் வகையில் தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றுவரும் தமிழ்தேசிய எழுச்சிநாள் நிகழ்வுகளில் வெளியிடப்பட்ட பிரகடனங்களின் தொகுப்பாக தேசிய பிரகடனத்தை வெளியிடும் முகமாக வவுனியாவில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி மாபெரும் தமிழ்தேசிய எழுச்சி மாநாடு ஒன்று நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இத் தமிழ்தேசிய எழுச்சி மாநாடு தொடர்பான ஏற்பாடுகளைச் செய் வதற்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இக்கலந்துரையாடலின் இறுதியில் முக்கிய தீர்மானங்களும், அவசர நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவிருப்பதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ச.கனகரட்ணம், சிவநாதன் கிஷோர், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோநோகாரதலிங்கம் ஆகியோர் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர். (யு)

# தியாக தீபம் திலீபன் நினைவாக சிறப்பு மருத்துவ முகாம்

மேற்படி இச்சிறப்பு மருத்துவ முகாம் தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தியாக தீபம் திலீபனின் மருத்துவ சேவையினரால் கிளி/கல்லாறு அ.த.க. பாடசாலையில் நேற்று முன்தினம் திலீபன் மருத்துவசேவை அபிவிருத்திக் குழுத்தலைவர் செல்வி க.கிருபாலினி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது;

பொதுச்சுடரினை - வைத்திய கலாநிதி பாஸ்கரன் ஏற்றி வைத்தார்.

தேசியக் கொடியினை - சிறப்பு மருத்துவபோராளி ஈழவாணி ஏற்றி வைத்தார்.

ஈகச் சுடரினை - நோர்வேயைச் சேர்ந்த பேராசிரியர் வைத்திய கலாநிதி பௌசர் ஏற்றிவைத்தார்.

திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை திருமதி பௌசர் அணிவித்தார்.

மலர் அஞ்சலி நிகழ்வை மருத்துவப்போராளி கிருபா ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து கண்காட்சி மண்டபத்தினை தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையின் மருத்துவ ஆலோசகர் வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் திறந்து வைத்தார். இதில் பற்சிகிச்சை, பொதுமருத்துவம், குழந்தை மருத்துவம் என்பன வழங்கப்பட்டது. "வருமுன் காப்போம்" பொதுச் சுகாதாரமும், பற்சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்துக்களும் மக்களுக்கு வழங்கப்பட்டன.

# சிங்களவர்களுக்கு விழும் அடிக்குப் பதிலாக தமிழர்கள் மீது பழியைப் போடுகிறார்கள்

-மட்டு. அரசியல் துறைப்பொறுப்பாளர்

சிங்களவர்களுக்கு எங்கோ அடி விழுகிறதென்றால் அதற்குப் பதிலாகத் தமிழர்கள் மீது பழியைப் போடுகின்றனர். தற்போது கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டதற்காக அவசர காலச் சட்டத்தை அரசு தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தி வருகிறது. இதனால் தமிழ் மக்கள் பல்வேறு துன்பங்களை எதிர் கொண்டு வருகின்றனர். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்:

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 18 ஆவது ஆண்டு நினைவினை முன்னிட்டு நேற்று ஆயித்திய மலையில் இடம்பெற்ற அடையாள உண்ணா நோன்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது; தமிழினம் கௌரவ மாக வாழ்வதற்கு சிறிலங்கா ஆட்சியாளர்கள் விடவில்லை. எங்களது மண்ணிலே நாங்கள் அடையாள அட்டைகளைக் காட்ட வேண்டிய நிலையுள்ளது. சோதனை செய்யப்படுகிறோம், சுடப்படுகிறோம். நாங்கள் சமாதானத்திற்காகக் கொடுத்த விலை அதிகம், உயிரையும், சதையையும் கொடுத்திருக்கிறோம். நாங்கள் அகிம்சை அடிப் படையிலும் போராடினோம். அந்தப் போராட்டத்தின் பெறுபேறுதான் இந்தத் தியாக தீபம் திலீபன். இனிக் கேட்டுப் பெறுவதில் சாத்தியமில்லை. போராடுவோம். எங்கள் விடுதலையை தேசியத்தலைவரின் காலத்தில் வென்றெடுப்போம் எனக் கூறினார்.

குடும்பிமலைக்கோட்ட இராணுவ, அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த அடையாள உண்ணாநோன்பு ஆயித்தியமலை ஆலய முன்றலில் முற்பகல் 11.00 மணிக்கு ஆரம்பமானது.

கரடியனாறு அ.த.க பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தேசியக் கொடியினை மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தளபதி நாகேஸ் ஏற்றி வைத்தார். பொதுச்சுடரினை மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளந்திரையன் ஏற்றி வைத்தார்.

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையை கரடியனாறுப் பிரதேச இராணுவத் தளபதி பாஸ்கரன் அணிவித்தார். வாழைச்சேனை ஏறாவூர் கல்வி வலயப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கிராமசேவை உத்தியோகஸ்தர்கள் இந்த அடையாள உண்ணா நோன்பில் கலந்து கொண்டனர்.

வைத்திய முனைவர் பன்னீர்ச் செல்வம், கட்டளைப் பணியகப் பொறுப்பாளர் சுரேஸ் ஆகியோரும் உரையாற்றினர். நிகழ்வின் நிறைவில் நீராகாரம் வழங்கப்பட்டு உண்ணா நோன்பு முடித்து வைக்கப்பட்டது. குடும்பிமலைக்கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஒளியன், மட்டு மாவட்ட தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் விமல்ராஜ், மட்டக்களப்பு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன் மற்றும் போராளிகள், பொதுமக்கள் எனப்பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.


மனித குருதிக்கு மாற்றீடு மனித குருதியே.

இரத்தவங்கி-யாழ்.போதனா மருத்துவமனை

# போராடும் மக்கள் அனைவராலும் “பிரபாகரனிசம்” பின்பற்றப்படும்

–“விடுதலைப்பேரொளி” நூல் வெளியீட்டுவிழாவில் காவல்துறைப் பொறுப்பாளர்



நாளைய வரலாறுகளில் விடுதலைக்காகப்போராடும் மக்கள் அனைவராலும் 'பிரபாகரனிசம்'' பின்பற்றப்படும் என்று தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் கூறினார்.

பிரான்சில் நடைபெற்ற ''விடுதலைப்பேரொளி'' நூல் வெளியீட்டு விழாவில் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் சிறப்புத்தளபதி, மாலதி படையணி கேணல் விதுசா ஆகியோர் ஆற்றிய உரைகள் திரையில் காண்பிக்கப்பட்டன.

பா.நடேசன் உரைநிகழ்த்துகையில்; உயிரினும் மேலாக மதிக்கப்படும் எமது தலைவர் குறித்த வரலாறானது தமிழீழப் போராட்ட வரலாறாகவும் நீண்டு செல்லும் ஒன்று. உலகில் விடுதலைப்போராட்ட வரலாறுகளை நிகழ்த்திய பல தலைவர்களது வரலாறு, அவர்களின் தேசவரலாறாகவும் விரிந்து செல்வதைப் போன்றதே. தென்னாபிரிக்காவைக் கட்டியெழுப்பிய வரலாறு நெல்சன் மண்டேலாவின் வரலாறாகவும், நெல்சன் மண்டேலாவின் வரலாறு தென்னாபிரிக்காவின் வரலாறாகவும் விரிவதைப்போல எமது தேசியத் தலைவருடைய வரலாறும் அத்தகைய பண்புகளைக் கொண்டது.

ஒரு கைத்துப்பாக்கியுடன் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் கெரில்லாப் போராட்டமாக வளர்ந்து மக்கள் போராட்டமாக மலர்ந்து இன்று தமிழீழத் தனிஅரசை நிறுவும் காலகட்டத்தில் வந்துநிற்கிறது. விடுதலைப்போராட்ட காலத்திலேயே சமூக விடுதலைக்கான கட்டமைப்புக்களையும் அவர் முன்னெடுத்துச் சென்றார். விடுதலைக்காகப் போராடும் மக்கள் அனைவராலும் “பிரபாகர னிசம்” நாளை படிக்கபபடும். அவருடைய போர்நெறி, விடுதலை, தீர்க்கதரிசனம், ஆளுமை என்ற பல்வேறு விடயங்கள் ஆய்வுக்குள்ளாகும் என்றார்.

சிறப்புத்தளபதி கேணல் விதுஷா உரை நிகழ்த்துகையில்;

விடுதலைப்போராட்ட காலத்தில் அவர் எங்களுடன் பகிர்ந்துகொண்ட கருத்துக்கள் சிலவற்றையே நான் படித்திருக்கின்றேன். மக்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் இன்னும் அதிகமாக வேண்டும். சகல திறமையும் வாய்ந்த தலைவர் எமக்கு வாய்த்திருக்கிறார். விடுதலையை வென்றெடுக்க வேண்டும். என்ற சிந்தனை மக்கள் மத்தியில் சென்றடைய வேண்டும்.

ஏழ்மையில் வாழும் சிறார்களின் கல்வியினை வளர்க்க வேண்டும். உடல்ஆராக்கியமுள்ளவர்களாக வளர்க்கவேண்டும். இப்பணியை எல்லாம் சுமந்து செல்லக்கூடிய போராளிகள் வேண்டுமென அக்கறைக் கொண்டு நிற்கும் உயரிய தலைவர் அவர் குறித்த “விடுதலைப் பேரொளி” எனும் நூல் விடுதலைப் போராட்டத்திற்குப் பயனுள்ள செயற்பாடு என்றார்.

## பிரான்சில்...

செனிவிரட்ன, க.வே. பாலகுமாரன் ,அப்துல் ஜபார், ச.பொட், தமிழன்பன், கரன் பார்க்கர், ரம்சி கிளார்க், பழ.நெடுமாறன், தியாகு இயக்குநர் சீமான், பேராசிரியர் இராமசுவாமி, சிவநேசச்செல்வன், கலையரசன், அனிதா பிரதாப் உட்பட தேசியத்தலைவரின் அருகே இருந்தவர்கள் தூர இருந்து ,அவர்தம் திறன்கண்டு வியந்தவர்கள், விடுதலைப் போராளிகள், தளபதிகள், அரசியல் ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள், பேரறிஞர்கள், கவிஞர்கள், சிங்கள, ஆங்கில பேராளர்கள் என 90 இற்கும் மேற்பட்ட ஆற்றலாளர்களின் எண்ணப்பதிவுகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.



# நிறைவு விழா

(அலுவலக செய்தியாளர்)

மாங்குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 4.00 மணிக்கு மாங்குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவ மனையில் இடம் பெறவுள்ளது.(தீ)

## இராணுவ புலனாய்வாளர் சுட்டுக் கொலை

சிறிலங்கா புலனாய்வுதுறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வவுனியாவில் இனந்தெரியாதோரால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவர் வவுனியா கணேசபுரத்தைச் சேர்ந்த யோகநாதன்ராசா செல்லத்துரை (வயது-45) என்ற முன்னாள் புளொட் உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்..

இவ்விருவருக்கும் என்ன நடந்தது என்பது பற்றி தமக்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. இதே வேளை காணாமல் போன பொலிசாரை தேடிக்கண்டுபிடிக்கும் பணியில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர். (33)

## அரசின்...

நிழல் யுத்தத்தையும் கண்டித்தும் அவசர கால நிலையில் சிறிலங்கா பாதுகாப்பு படைகள் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்களையும் அட்டூழியங்களையும் கண்டித்தும்

*சிறிலங்கா அரசாங்கமும் அரச படைகளும் இணைந்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முற்றாக இல்லாதொழித்துள்ளமையை கண்டித்தும்

* தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள உளவியல் யுத்தத்தை கண்டித்தும்

*திருமலையில் சிறிலங்கா இராணுவமும் படைகளும் நடாத்தும் திட்டமிட்ட சதிகார குழப்பகரமான நடவடிக்கைகளைக்கண்டித்தும்

* கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகள் உடனடியாக அரசியல் பணிகளை ஆரம்பிப்பதற்கு வசதி யாக தகுந்த பாதுகாப்பும் உத்தரவாதமும் வழங்கக்கோரியும்

* பாடசாலைகள், வணக்க ஸ்தலங்களுக்குப் பக்கத்தில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளமையை கண்டித்தும்

*திருகோணமலையில் குழப்பகரமான நடவடிக்கைக்கு மூல காரணமான சட்டவிரோத புத்தர் சிலையை உடனடியாக அகற்றுமாறு கோரியும்

நாளை புதன் கிழமையன்று பூரண கதவடைப்பு நடாத்தி எமது ஒன்றுபட்ட எதிர்ப்பினை சிறிலங்கா அரசிற்கு தெரிவிப்பதன் மூலம் சர்வதேச சமூகத்திற்கு சிறிலங்கா அரசாங்கம் தமிழ்பேசும் மக்களுக்கெதிராக செய்யும் அட்டூழியங்களை அம்பலப்படுத்துவோம் எனக் கோரப்பட்டுள்ளது.

## நவம்பர்...

களின் பெயர்ப்பட்டியல்கள்.

அனைத்து மாவட்ட செயலக காரியாலயங்களிலும் காட்சிக்கு வைக்கப்படும். அலுவலக நேரத்தில் அவற்றைபார்வையிடலாம். மாவட்ட செயலகங்களில் தபால் மூல வாக்குப் பதிவுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அவற்றை எதிர்வரும் 28 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாயின் 50 ஆயிரம் ரூபாவையும் ஏனைய கட்சிகள் 75 ஆயிரம் ரூபாவையும் கட்டுப்பணமாக செலுத்தவேண்டும் என்று தேர்தல் திணைக்கம் அறிவித்துள்ளது.

## படையினரின்...

வதாகவும் அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

இதுபற்றி மேலும் தெரியவருகையில்; குறித்த காலப்பகுதியில் மன்னாரில் வைத்து ஏகாம்பரம் விஜிகலா மற்றும் சின்னத்தம்பி சிவமணி எனும் இரு குடும்பத் தலைவியரைக் கூட்டாக பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியமை மற்றும் சித்திரவதைகளிற்குள்ளாக்கியமை தொடர்பில் கடற்படையினர் இருவரிற்கும் மற்றும் 12 பொலிசாரிற்குமெதிராக அனுராதபுரம் மேல்நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்குகள் மீதான விசாரணை நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட பெண்களுள் ஒருவரும் முக்கிய சாட்சிகளில் ஒருவருமான ஏகாம்பரம் விஜிகலா மர்மமான முறையில் காணாமல் போயுள்ளார்.

இதேவேளை மற்றைய பெண்ணும் சாட்சியுமான சின்னத்தம்பி சிவமணி தொடர்ச்சியான கொலைப்பயமுறுத்தல்களிற்கு உள்ளாகி வருவதாகவும் தெரிய வருகின்றது. இது தொடர்பாக குறித்த பெண் தனது தரப்பு சட்டத்தரணியான எம்.றெமீடியசிற்கு முறைப்பாடு செய்துள்ளார். அம்முறைப்பாட்டில் விசாரணைகளிற்கு ஆஜரானால் கொல்லப்போவதாக எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (27)

## யுத்த...

பான்மையாக வாழும் தமிழ்பேசும் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையினை தொலைத்து விட்டு ஒவ்வொரு கணப்பொழுதையும் சொல்லொணாத் துயரத்துடன் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

கண்காணிப்புக் குழுவிற்கு எத்தனையோ முறையீடுகள் சமர்ப்பித்தும் சோதனைச்சாவடிகள் குறைவதாக இல்லை .

நாளாந்தம் புதிய புதிய சோதனைச் சாவடிகளும் சோதனை நடவடிக்கைகளும் அதிகரித்த வண்ணமே உள்ளன.

கொலைக்களமான சிறிமாபுரம் பிரதேசத்தில் 100 மீற்றர்களுக்கு மேற்பட்ட தூரம் இறக்கி விடப்படுகின்றனர்.

தமிழ் பேசும் மக்கள் கூடுதலாக பிரயாணம் செய்யும் உட்பிரவெளி, புல்மோட்டை பாதையில் தமிழ்பேசும் மக்களை வேண்டுமென்றே துன்புறுத்தும் நோக்கில் கடுமையான சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றது.

பெரும்பான்மையின மக்கள் பயணிக்கும் சாலைகளில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

திட்டமிட்ட அடிப்படையில் இரவு நேரங்களில் பாதுகாப்புப் படைத்தரப்பாலேயே குண்டுகள் வீசப்படுகின்றன. ஏனெனில் குண்டுகள் வீசப்படும் இடங்களில் அடுத்த நாட் காலையில் காவலரண்கள் அமைக்கப்படுகின்றன. இதற்குரிய முன்னேற்பாட்டு நடவடிக்கையே இந்தத்தாக்குதல்கள்.

தற்போதுள்ள சூழ்நிலையில் 2002ஆம் ஆண்டுக்கு முன்னைய யுத்தம் காலத்தைவிட மிகவும் மோசமானதொரு நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் மோசமான யுத்த நடைபெற்ற காலப்பகுதிகளில் கூட திருகோணமலை நகரில் இவ்வாறான இராணுவக் குவிப்பும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு உயிர்ப்புடன் செயற்படுவதாக காட்டிக்கொள்வதில் எவ்வித பயனுமில்லை.

எனவே திருகோணமலை நகரில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையையும் அத்து மீறி புகுத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு இராணுவத்தையும் உடனடியாக அகற்றுவதற்குரிய நடவடிக்கையை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

தற்போது திருகோணமலை நகரில் பூரணமாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் சிறிலங்கா அரசாலும் இராணுவத்தாலும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக சர்வதேசத்திற்கு தெரியப்படுத்தவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# சாவு அறிவித்தல்



## திருமதி சின்னம்மா இராசதுரை

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல 331, 5ஆம் யூனிற், இராமநாதபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சின்னம்மா இராசதுரை அவர்கள் 19.09.2005 திங்கட்கிழமை காலமானார். அன்னார், காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னம்மா தம்பதிகளின் மகளும்,காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் இளையபிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற செல்லமுத்துவின் சகோதரியும், நரசிங்கம், கமலாதேவி, சகுந்தலாதேவி மல்லிகாதேவி,இலட்சுமிதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், யோகவதி, காலஞ்சென்ற மதியாபரணம், நமசிவாயம், காலஞ்சென்ற குமாரசாமி, நேசையா ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், நாகலிங்கம், தங்கச்சியம்மா, இரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.09.2005 (இன்று) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு,அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் இராம நாதபுரம் மயில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

மகள்:– திருமதி கு. மல்லிகாதேவி

(இராமநாதபுரம், கிளிநொச்சி)

பேரன்:– திரு. மதியாபரணம் லோகநாதன் (வவுனியா)

(6723) (இலட்சுமணன்)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் .2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.